விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 009 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 13 சனிக்கிழமை (28.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை


T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# தமிழரசுக் கட்சியில் மீண்டும் தாழமுக்கம்

# இன்று பலத்த சூறாவளி வீசலாம்

## நானே கட்சியின் தலைவர்

### மாவை அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து நான் விலகவில்லை. அதன் பிரகாரம் கட்சியின் தலைவராக நானே தொடர்கின்றேன்.

ஆகவே தலைமைப்பதவி தொடர்பில் வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டிய அவசியமில்லை என்று மாவை.சோ.சேனாதிராசா அறிவித்துள்ளார். 15

## மாவை சேனாதி தலைவர் பதவியைத் துறந்துவிட்டார்

### எம்.ஏ.சுமந்திரன் விளக்கம்



(யாழ்ப்பாணம்)

மாவை சோ.சேனாதிராசா கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக உத்தியோக பூர்வமாக அறிவிப்பைச் செய்தபின்னர் எந்த வொரு அனுமதியையும் யாரிடமும் பெற வேண்டுமென்று யாப்பில் கூறப்படவில்லை என்று தமிழரசுக் கட்சியின் வெளி விவகாரங்களுக்கான செயலாளரும், ஜனாதிபதி 16

## மாவை சேனாதிராசாவை பதவி நீக்க முடியாது

### சிறிநேசன் எம்.பி தெரிவிப்பு



(வவுனியா)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரை மட்டுமல்ல கட்சியின் 04

## அநுரவின் சர்வதேச டீல்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்



(கொழும்பு)

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்தால் இந்தியா, சீனா உள்ளடங்கலாக சர்வதேச நாடுகளுடன் மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்கள், கலந்துரையாடல்கள் பகிரங்கப் படுத்தப்பட வேண்டும் என பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)


## இலங்கையிலும் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல்!

### இதுவரை 100 பன்றிகள் பலி

(கொழும்பு)

ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல் காரணமாக நாட்டில் சுமார் நூறு பன்றிகள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. 04

## பயணிகளுடன் சென்ற பேருந்தின் முன்சில்லு அச்சு உடைந்து விபத்து



(இயக்கச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கி ஏ9 பிரதான வீதி வழியாக நேற்று வெள்ளிக்கிழமை பயணிகளுடன் பயணித்த இலங்கைப் போக்கு 15

## அமைதியை நிலைநாட்ட ஆயுதம் தரித்த முப்படையினர்

### வெளியாகியது வர்த்தமானி

(கொழும்பு)

நாட்டின் சகல நிர்வாக மாவட்டங்களினதும் அமைதியை நிலை 16

## புலனாய்வுப் பிரிவின் அலுவலகம் வவுனியாவில் அமைக்கத் தடை

### ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முடிவு

(வவுனியா)

தேசிய புலனாய்வுப் பிரிவிற்கான அலுவலகம் அமைப்பதற்காக வவுனியா நகரப் பகுதியில் காணி கோரப்பட்ட நிலையில் அது நிராகரிக்கப் பட்டுள்ளது.

வவுனியா பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்றது.

காணியற்ற அரச திணைக்களங்கள், தேசிய புலனாய்வு அலுவலகம் 16

## வறிய மாணவர்களுக்கு ரூ.6,000 வழங்கப்படும்

(கொழும்பு)

அஸ்வெசும பயனாளர் குடும்பத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கும் அஸ்வெசும கொடுப்பனவு பெறாது ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களின் மாணவர்களுக்கும் 6000 ரூபாய் 04

## 'Gov.Pay' செயலி அறிமுகம்

### டிஜிட்டல் முறைமையின் கீழ் அரச கொடுப்பனவுகள்

(கொழும்பு)

அரச நிறுவனங்களுக்குச் செலுத்தப்படும் அனைத்துக் கொடுப்பனவுகளும் டிஜிட்டல் மயப்படுத்தப்படவுள்ள 15

## மதவாச்சி வைத்தியசாலையில் நீல நிற மேனியுடன் பிறந்த குழந்தை

(மதவாச்சி)

உடல் முழுவதும் நீல நிறத்துடன் குழந்தை ஒன்று மதவாச்சி அரச வைத்திய சாலையில் பிறந்துள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மறப்போம் மன்னிப்போம் என்ற சிந்தனையுடன் வாழப் பழகுங்கள்

## வைத்திய நிபுணர் பேரானந்தராஜா அறிவுரை



இன்றிமையாத மருத்துவக் கட்டுரைகளையும் மருத்துவ ஆரோக்கியம் தொடர்பில் மக்களின் ஐயங்களை, கேள்விகளுக்கு உட்படுத்தி மருத்துவ நிபுணர்களிடமிருந்து விளக்கங்களைப் பெற்று பொதுமக்களை அறிவுறுத்துவது பாராட்டத்தக்கது. இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலை பொது வைத்திய நிபு ணர் த.பேரானந்தராஜா தெரிவித்தார்.

வலம்புரிப் பத்திரிகையின் 25 ஆவது ஆண்டு விழா கடந்த 20 ஆம் திகதி நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 25 வருடங்களாக வெளிவரும் வலம்புரிப் பத்திரிகை பொது மக்களால் விரும்பி வாசிக்கப்படும் நாளிதழ். வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கம் மிகவும் கனதியானது. தனித்துவமானது. விழுமியங்களை வலியுறுத்துவது. பொது மக்களின் கருத்தைப் பிரதிபலிப்பது.

உடல், உள ஆரோக்கியத்திற்கு

அவர் மேலும் தெரிவிக்கையில், வைத்தியசாலைக்குச் செல்லாமல், மருந்து இல்லாமல் வாழ்வதற்கு என்ன செய்யலாம் என்பதை நீங்கள் வலம்புரி வார இதழில் வருகின்ற 'சுகமான விடியல்' பகுதியை வாசித்து வந்தீர்களானால் உடல் நலம் குன்றாமல் வாழக்கூடிய வழியை அவை சொல்லித் தரும்.

அவற்றுடன் உடற்பயிற்சி, நடைப் பயிற்சி, நல்ல நித்திரை, மூச்சுப் பயிற்சி போன்றவற்றை ஒவ்வொரு நாளும் செய்வோமானால் நோய்கள் எம்மை இலகுவில் அணுகாது.

சிரிப்பு ஒரு நல்ல மருந்து. நடக்கும் போது, பேருந்தில் பிரயாணம் செய்யும் போது, வீட்டில் இருக்கும் போது சிரியுங்கள்.

சிரிப்பதற்குரிய நிகழ்வுகளை வாசியுங்கள். இதை நீங்கள் செய்வதனால் உங்களுக்கு மருந்துகள் தேவைப்படாது.

இதைவிட விரதம் இருப்பது ஒரு நல்ல நடைமுறை. குறைந்தது கிழமையில் ஒரு நாள் இரண்டு நாள் விரதம் இருப்பது நன்மை தரும்.

அதிகளவு காய்கறிகள், பழங்களை நீங்கள் உட்கொள்வீர்களானால் அதுவும் சிறந்தது.

இப்போதெல்லாம் துரித உணவுகளை நாம் உண்கின்றோம். அதில் கொழுப்புகள் அதிகம். அதை உண்பதால் உடம்பு அதிகரிக்கும். உடம்பு அதிகரிக்க கொலஸ்ட்ரோல் கூடும்.

ஆகவே, இயற்கையான உணவுகளை உண்ணப் பழக வேண்டும். போதியளவு தண்ணீரை அருந்துவதுடன் நேரத்திற்குச் சாப்பிடப் பழக வேண்டும். குறிப்பாக வீட்டிலே இருக்கிறவர்கள் எல் லோரும் ஓர் இடத்திலிருந்து சாப்பிடும் சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

நன்றியுடையவர்களாக இருப்பதும் ஒரு சிறந்த மருந்து. வலம்புரிப் பத்திரிகை தனது வெள்ளி விழாவைக் கொண்டாடும் இத் தருணத்தில், பத்திரிகையின் வளர்ச்சிக்கு உழைத்தவர்களை நினைவு கூரும் பண்பு மிகவும் வரவேற்கத்தக்கது.

மறப்போம் மன்னிப்போம் என்ற சிந்தனையுடன் வாழ்வீர்களானால், மன மகிழ்வுடன் நோயற்று, கூடிய காலம் வாழலாம். உன்னையே நீ விரும்பு அது தான் மிகவும் முக்கியம்.

அதைத்தான் வலம்புரியின் சுகமான விடியல் பகுதி கேள்வி பதில் மூலமாகவும் விளக்கங்கள் மூலமாகவும் தந்து கொண்டிருக்கின்றது. நாங்கள் இந்நேரத்தில் அதனை மனதார வாழ்த்துகின்றோம்.

எதிர்மறையான நிகழ்வுகளை நாங்கள் வாசிப்பதையோ, கேட்பதையோ தவிர்க்க வேண்டும். ஊடகங்கள் அதனை முன்பக்கத்தில் பிரசுரிப்பதை இயலுமான வரை தவிர்ப்பது நல்லது.

முன்பக்கத்தில் மகிழ்ச்சிகரமான - நல்ல செய்திகள் வர வேண்டும். அப்படியான தொரு தன்மையை நாங்கள் ஏற் படுத்திக் கொள்ள வேண்டும்.

சிறுவர்களுக்கு பத்திரிகைகளை வாசிக்கப் பழக்க வேண்டும். புத்தகங்களை வாசிக்கப் பழக்க வேண்டும்.

இதனால் பொது அறிவு அதிகரிக்கின்றது. இதனை வலம்புரி பத்திரிகை சிறப்பாகச் செய்து வருகிறது.

இன்று வலம்புரி தனது வெள்ளி விழாவை கொண்டாடுகிறது என்றால் அது நல்ல, எல்லோருக்கும் ஏற்ற பல செய்திகளைத் தாங்கி வருவதால் தான் சாத்தியமாகியுள்ளது.

ஆகவே வலம்புரியினுடைய வளர்ச்சி மேலும் மேலும் வளர வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)


# கிளி/ கிளிநொச்சி மத்திய கல்லூரி

(தேசிய பாடசாலை)

## சிற்றுண்டிச்சாலைக்கான ஒப்பந்தம் கோரல்

**நியந்தனைகள்**

01. 2025 ஆம் ஆண்டுக்கான ஆகக் குறைந்த ஒப்பந்தத் தொகை 150,000.00
02. நாளாந்த வாடகை நாளொன்றுக்கு குறைந்தது 1300.00
03. மீளளிக்கப்படாத ரூபா 1000.00 செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.
04. கல்வி அமைச்சு சுற்றுநிருபத்திற்கு அமைய பாடசாலையினால் அனுமதிக்கப்படுகின்ற உணவுகள் மற்றும் பொருட்கள் மாத்திரமே விற்பனை செய்ய முடியும்.
05. சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.
06. பாடசாலைக்கு களங்கம் விளைவிக்கும் செயற்பாடு காணப்பட்டால் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும். அத்தோடு எந்தவித நிதியும் மீளளிக்கப்படாது.
07. ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பாடசாலை முகாமைத்துவக் குழுவே முடிவு செய்யும்.
08. பணி புரிபவர்களின் வயது, உடல் நலம் என்பவற்றை பாடசாலையின் உணவுக் குழுவினர் குத்தகை எடுக்கும் நபருக்கு அறியத்தருவார்கள்.
09. விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அதிபர், கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
10. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிற்றுண்டிச்சாலை விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
11. நேரடியாக சமர்ப்பிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
12. விண்ணப்பங்கள் பத்திரிகை விளம்பர திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் கிடைக்கப்பெற வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(C-1900) **அதிபர்**


# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **லோகநாதன் சதீஸ்**

28.12.2024



ஆண்டுகள் எட்டு கடந்ததுவோ
அன்பு முகம் நீங்கிச் சென்று
ஆனாலும் எம் மனமோ
இன்னும் ஆறவில்லை
காலங்கள் பல கடந்தாலும்
நீங்கள் என்றும் எம் மனதில்
காவியமாய் இருப்பீர்கள்

(642)

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

என்றும் நீங்கா நினைவுடன்...
அப்பா, அம்மா, தங்கை, மச்சான், மருமக்கள்

# மரண அறிவித்தல்

மலர்வு 07 - 12 - 1942



உதிர்வு 25 - 12 - 2024

## கிருஷ்ணபிள்ளை இராசம்மா

யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை இராசம்மா அவர்கள் 25.12.2024 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பொடி - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும் வைத்திலிங்கம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் குணபாலா, சந்திரபாலா, சுசீலாதேவி, வசந்தி, தனபாலா, காலஞ்சென்ற ஜெயபாலா மற்றும் சசிகலா ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கமணி, பஞ்சதேவி, கலியுகவரதன், இரத்தினசிங்கம், சசிலேகா, கதிர்ச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமியாரும் தனுஷன், ஜெயமாறன், சிந்துஜா, சரண்யா, கவாஸ்கர், அகிபன், ஜெனார்த்தன், சஜித்தன், பவதாரணி, திலக்ஷன், கலிசியா, கபிலையா, சசிரன் ஜெயந்த, சசிந்த றக்சனா, யாதவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிறிஷாந், சம்ஹிதா, தமிரா, நயனி, மாயோன், சேயோன், எயினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 29.12.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 12.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல் : வை. கி. தனபாலா
முன்னாள் கிராம அலுவலர் (மகன்)
077 677 9348

(C-1902)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரிக்ஸ் கூட்டமைப்பில் இணையும் வாய்ப்பை இழந்த இலங்கை

**(கொழும்பு)**

**ரஷ்யா தலைமையிலான பிரிக்ஸ் நாடுகளின் கூட்ட மைப்பில் இணையும் இலங்கையின் ஆர்வம் தற்போதைக்கு கைகூடாத நிலையில் காணப்படுகின்றது.**

கடந்த ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை ரஷ்யாவின் கசான் நகரில் நடைபெற்ற மாநாட்டில் பிரிக்ஸ் கூட்டமைப்பில் சேர இலங்கை உட்பட 35 நாடுகள் விண்ணப்பித்திருந்தன.

பிரிக்ஸ் அமைப்பில் சேர தமது விருப்பத்தை வெளிப் படுத்திய கடிதமொன்றை இலங்கை வெளிவிவகார அமைச்சு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கும் அனுப் பியிருந்தது.


எனினும் விண்ணப்பித்த 35 நாடுகளில் 9 நாடுகளை மாத்திரமே இணைத்துக் கொள்ள கூட்டமைப்புக்கு தலைமை தாங்கும் ரஷ்யா நடவடிக்கை எடுத்துள்ளது.

மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, பெலாரஸ், பொலிவியா, கியூபா, உகண்டா, கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட ஒன்பது நாடுகள் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் பிரிக்ஸ் கூட்ட மைப்பில் இணைத்துக் கொள் ளப்பட உள்ளதாக ரஷ்யா தெரி வித்துள்ளது.

"மாநாட்டின் நோக்கம் பிரிக்ஸ் கூட்டமைப்பை விரி வடையச் செய்வதாகும். அது தற்போது வெற்றிகரமாக நடந்துள்ளது. இணைக்கப்படும் புதிய நாடுகளுக்கு ஒப்பந் தங்கள் அனுப்பப்பட்டுள்ளன." என்று ரஷ்ய அதிகாரி யூரி உஷகோவ் தெரிவித்துள் ளார்.

எதிர்காலத்தில் பிரிக்ஸ் கூட்டமைப்பில் சேர மேலும் நான்கு நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. விரை வில் அவர்களும் அமைப்பில் இணைவார்கள் என்றும் யூரி உஷகோவ தெரிவித்தார்.

தற்போதைக்கு 20 இற்கும் மேற்பட்ட நாடுகள் பிரிக்ஸ் அமைப்புடன் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித் துள்ளன.




ஒரே மாதிரியான சிந்தனைகள் கொண்ட நாடுகள் ஒன்றாக செயற்படுவது சிறப்பு எனவும் அவர் வலியுறுத்தி யுள்ளார்.

இதேவேளை, இலங்கை யின் விண்ணப்பம் நிராகரிக் கப்பட்டுள்ளதாக கருதப்படு கின்றது. கசான் மாநாட்டுக்குப் பின்னர் அவ்வாறானதொரு தகவல் சமூக வலைதளங் களில் செய்தி வெளியான போது அதனை இலங்கைக் கான ரஷ்ய தூதரகம் நிரா கரித்திருந்தது.

எனினும் புதிதாக இணைக் கப்பட உள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(நி-8)

## ரயில் சேவையை அதிகரிக்க திட்டம்

(கொழும்பு)

ரயில்வே சேவையை நாளாந்தம் 70 சதவீதமாக அதிகரிப் பதற்குத் திட்டமிட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜெயசுந்தர தெரிவித்தார்.

இலங்கை ரயில்வே திணைக்களத்தின் புதிய பொது முகாமையாளராக தம்மிக்க ஜெயசுந்தர நேற்று முன்தினம் பதவியேற்றார்.

பதவியேற்பு நிகழ்வின் பின் னர் ஊடகங்களுக்கு உரையாற் றும்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இலங்கை ரயில்வே திணைக் களத்தின் பொது முகாமையாள ராக என்னை மீண்டும் நியமித்த தற்காக அமைச்சரவை அமைச் சர் களுக்கு நன்றிகளைத் தெரி வித்துக்கொள்கின்றேன்.

என்னைப் பொறுத்த வரையில், மக்களுக்கு மகிழ்ச் சியைத் தரும் நிறுவனமாக ரயில்வே துறையை மாற்ற வேண்டும். மக்களுக்கு உகந்த சேவையை வழங்க வேண்டும்.

ரயில்வே துறை மக்களின் வாழ்வாதாரத்திற்கு ஒரு முக்கிய நிறுவனமாகும். அரசாங்கத்தின் புதிய கொள்கைகளின்படி, நாளா ந்த பொதுமக்களின் பயணத்தை எளிதாக்கும் வகையில் ரயில் சேவையை 70 சதவீதமாக அதிகரிக்கும் திட்டம் உள்ளது.

ரயில்வே துறைக்குள் சில நெருக்கடிகளும் சிக்கல்களும் உள்ளன. அவற்றை விரைவில் நிவர்த்தி செய்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன் னெடுப் போம் எனத் தெரிவித்தார்.(நி-8)

## கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்களுக்கு வைத்தியசாலைகளில் பற்றாக்குறை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் வைத்தியசாலைகளில் கதி ரியக்க தொழில்நுட்பவிய லாளர்களுக்கு பற்றாக்குறை காணப்படுவதாக அரச கதிரியக்க தொழில் நுட்பவி யலாளர்கள் சங்கம் தெரி வித்துள்ளது.

40 வீதத்திற்கும் அதிக மான அதிகாரிகளுக்கான பற்றாக்குறை காணப்படுவ தாக அதன் தலைவர் சானக தர்ம விக்ரம தெரிவித் தார்.


கடந்த அரசாங்கத்தால் அரச கதிரியக்க தொழில் நுட் பவியலாளர் களை சேவையில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை மட்டுப்படுத்தப்பட்டமையால் இந்த நிலைமை ஏற்பட்ட தாக அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக நோயாளர்களின் சிகிச்சை மற்றும் பரிசோதனை நட வடிக்கைகள் தாமதமடைந் துள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சானக தர்மவிக்ரம தெரிவித்துள் ளார்.

இந்த ஆண்டில் 80 இற்கும் அதிகமான கதிரி யக்க தொழில் நுட்பவிய லாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதுடன் 41 உயர் டிப்ளோமாதாரிகள் தற்போது தொழில்வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

தற்போது 620 கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சேவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## ஆளில்லா விமானம் திருமலையில் மீட்பு



(திருமலை)

வெளிநாட்டில் தயாரிக்கப் பட்ட ஆளில்லா விமானம் ஒன்று திருகோணமலை கடற் பரப்பில் இருந்து மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை விமானப் படை விசாரணை களை ஆரம்பித்துள்ளது. குறித்த ஆளில்லா விமானம் நேற்று முன்தினம் அதிகாலை கடற்றொழிலாளர்களினால் திருகோணமலை கடல் பகுதி யில் வைத்து அவதானிக்கப் பட்டுள்ளது.

திருகோணமலை கரை யில் இருந்து சுமார் 35 கடல் மைல் தொலைவில் குறித்த ஆளில்லா விமானம் மிதந் துள்ளது. அதனை கைப்பற்றி தமது படகில் இணைத்து கொண்ட மீனவர்கள் அது தொடர்பில் கடற்படையினருக்கு தகவல் வழங்கியுள்ளனர். இதனையடுத்து குறித்த பகு திக்கு சென்ற கடற்படையினர் விமானத்தை மீட்டு கரைக்கு கொண்டுவந்தனர்.

டார்கட் ட்ரோன் என அழைக்கப்படும் குறித்த ஆளி ல்லா விமானம் பயிற்சிகளின் போது பயன்படுத்தப்படும் விமானமாகும் என விமானப் படை ஊடக பேச்சாளர் குரூப் கெப்டன் எரந்த கீகனகே தெரி வித்துள்ளார்.

அந்த ஆளில்லா விமானம் பல வருடங்களுக்கு முன்னர் இந்தியாவின் ஒடிசா மாநி லத்தில் இருந்து நாட்டுக்கு வந்துள்ளமை தொடர்பில் தகவல்கள் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

## தேசிய பொங்கல் விழா இம்முறை யாழில்

### புத்தசாசன அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

தேசிய தைப்பொங்கல் விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்த புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள் ளது.

இதன்படி, தேசிய தைப் பொங்கல் விழாவை எதிர் வரும் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாணம் நெல்லிப் பளையில் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தொடர்பான கலந்து ரையாடல் ஒன்று நேற்று முன் தினம் புத்தசாசன, சமய மற் றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தலைமையில் இடம் பெற்றது.


இதன்போது, வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் [illegible] யாத்திரைக்கு இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதி களவிலான பக்தர்களை இணைத்துக் கொள்ளவும் அதற்கு அரசாங்கத்தின் உத்தி யோகபூர்வ அனுசரணையைப் பெற்றுத்தருமாறும் பெருந் தோட்ட மற்றும் சமூக உட் கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் கோரி க்கை விடுத்துள்ளார்.

அதற்குத் தேவையான நட வடிக்கைகளை முன்னெடுக்கு மாறு அமைச்சர் ஹினிதும சுனில் செனவி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் கள அதிகாரிகளுக்கு ஆலோ சனை வழங்கியுள்ளார்.(நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஆஸி.வீரருடன் மோதல் கோலிக்கு அபராதம் விதிப்பு




மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இந்தியாவின் நான்காவது டெஸ்டில் சாம் கோன்ஸ்டாஸ°டன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதற்காக விராட் கோலிக்கு போட்டிக் கட்டணத்தில் 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

அது தவிர முன்னாள் இந்திய அணித் தலைவருக்கு ஒரு குறைமதிப்பு புள்ளியும் சர்வதேச கிரிக்கெட் நிர்வாகத்தினால் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம் மெல்போர்னில் ஆரம்பமான நான்காவது டெஸ்ட் போட்டியில் விராட் கோலி அவுஸ்திரேலியாவின் 19 வயதான இளம் வீரர் சாம் கோன்ஸ்டாஸின் தோளில் இடித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

விராட் கோலி ஐசிசி விதியை மீறி தவறாக நடந்து கொண்டதால் இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

தன் மீதான தவறை விராட் கோலி ஒப்புக்கொண்டார்.

ஐசிசி நடத்தை விதிகளில் உள்ள 2.12 என்ற விதியில் "கிரிக்கெட்டில் எந்த விதமான தகாத உடல் தொடர்பும் தடை செய்யப்பட்டுள்ளது.

வீரர்கள் வேண்டுமென்றே, பொறுப்பற்ற முறையில் மற்றும் அல்லது அலட்சியமாக நடந்தால் அல்லது கட்டுப்பாடுகள் இல்லாமல் மற்றொரு வீரர் அல்லது நடுவரைத் தோளினால் இடித்தால், இந்த விதிமுறைகளை மீறியதாக கருதப்படுவார்கள் என குறிப்பிட்டு இருக்கிறது. (6-8)

## பும்ராவுக்கு சவால்விட்ட ஆஸியின் இளம் வீரர் சாம்

பும்ராவைத் தொடர்ந்து டார்கெட் செய்து கொண்டே இருப்பேன் என இளம் வீரர் சாம் கான்ஸ்டாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, இது கனவு நிஜமான தருணம். ஏனெனில் ரசிகர்களால் நிறைந்திருக்கும் மைதானத்தை பாருங்கள். பட் கமின்ஸ் உட்பட அனைவரும் என்னை அணிக்குள் வரவேற்றார்கள். பயமின்றி விளையாடுமாறு கப்டன் கமின்ஸ் என்னிடம் சொன்னார்.

பும்ராவுக்கு எதிராக ரேம்ப் ஷாட் அடிப்பது பற்றி திட்டமிடவில்லை. அவர் உலகத்தரம் வாய்ந்த பவுலர். இருப்பினும் அவர் மீது அழுத்தத்தை போட முயற்சித்தேன்.

அவருடைய திட்டங்களை மாற்ற வைப்பதே முக்கியமான விடயம். இந்த வகையில் அவரைத் தொடர்ந்து நான் டார்கெட் செய்து கொண்டே இருப்பேன். அவரும் கம்பேக் கொடுக்கலாம். அப்போது என்ன நடக்கிறது என்பதை பார்ப்போம் என்று சாம் கான்ஸ்டாஸ் கூறினார்.

அவுஸ்திரேலியா-இந்தியா அணிகளுக்கு இடையேயான 4 ஆவது டெஸ்ட் போட்டியில் அறிமுக வீரராக களமிறங்கிய சாம் கான்ஸ்டாஸ் அதிரடியாக விளையாடி அரை சதம் கடந்தார். அதேவேளை அவுஸ்திரேலிய வீரர்கள் பயந்து விளையாடும் பும்ரா ஓவரில் 2 சிக்சர்களை விளாசி அனைவரினதும் கவனத்தையும் ஈர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)




## இலங்கை....

யால, வில்பத்து வனப்பகுதிகளிலும் கம்பஹா, மீரிகம, பேராதனை மற்றும் இரத்தினபுரி போன்ற இடங்களிலும் இந்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தாரக பிரசாத் தெரிவித்துள்ளார்.

தற்போது காட்டுப் பன்றிகள் மத்தியில் இந்த நோய் வேகமாகப் பரவி வருகிறது.

இதன் தாக்கம் நாட்டில் உள்ள அனைத்துக் காட்டுப் பன்றிகளையும் பாதிக்கும் நிலை காணப்படுவதாகவும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தாரக பிரசாத் தெரிவித்துள்ளார்

ஆபிரிக்க பன்றிக்காய்ச்சல் உள்ளிட்ட சில நோய்த்தாக்கம் காரணமாக நாட்டில் பன்றி இறைச்சி விற்பனையை தடை செய்வதற்கு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் கடந்த ஒக்ரோபர் மாதம் நடவடிக்கை எடுத்து விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டது.

மேல், வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களில் அதிகளவான பண்ணைகளில் இந்த நோய் பரவியிருந்த நிலையில் உயிரிழந்த பன்றிகளின் உடல்களை அழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந-7)

## வறிய மாண....

நிவாரணத் தொகை வழங்கப்படும் என நிதிப் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரிய பெரும தெரிவித்துள்ளார்.

அத்துடன் கல்வி அமைச்சின் ஊடாக இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

பொருளாதார தாக்கத்தினால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பொருளாதார மீட்சிக்கான திட்டங்களுடன் அவதானத்துக்குரிய தரப்பினருக்கு நிவாரணம் வழங்கும் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

பிள்ளைகளின் கல்வி மீதான சுமையைக் குறைப்பதற்கு அரசாங்கம் சிறந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதற்கமைய அஸ்வெசும பயனாளர்களின் குடும்பங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் பாடசாலைத் தவணையை முன்னிட்டு பாடசாலை கற்றல் உபகரணங்கள் பெற்றுக் கொள்வதற்கு 6000 ரூபா வழங்கப்படும்.

அதேபோல் அஸ்வெசும நலன்புரித் திட்டத்துக்குள் உள்ளடங்காத ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களின் பாடசாலை மாணவர்களுக்கும் இந்த 6000 ரூபா நிவாரணத் தொகை வழங்கப்படும்.

கடந்த காலங்களில் பாடசாலை மாணவர்களுக்கு பாதணி வழங்குவதற்கு பின்பற்றப்பட்ட வழிமுறை இந்த திட்டத்திலும் செயற்படுத்தப்படும் எனத் தெரிவித்தார். (ந-7)

## அநுரவின்....

ஜனாதிபதி அநுர ஜனவரி முற்பகுதியில் பீஜிங் செல்லவுள்ள நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது "இந்தியா எமது அயல் நாடு. எனவே இந்தியாவுடன் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகம் தொடர்பில் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்.

இவ்வாறு இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பைப் பேணும் அதேவேளை ஏனைய நாடுகளுடனும் ஒன்றித்துப் பயணிக்க வேண்டும். இந்தியாவுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் அரசு இன்னும் முழுமையாக அறிவிக்கவில்லை. ஒரு சில விடயங்கள் மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளன.

எனவே இந்தியாவுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு முழுமையாக தெளிவுபடுத்த வேண்டும்.

எட்கா ஒப்பந்தத்துக்கு தேசிய மக்கள் சக்தியே கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. அது தொடர்பான பேச்சுகளை தொடர்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

எனவே, எட்கா தொடர்பிலான அநுர அரசின் அணுகுமுறை என்ன? இது பற்றியும் தெளிவுபடுத்த வேண்டும். அதேவேளை சர்வதேசத்துடன் இரகசிய ஒப்பந்தங்கள் தேவையில்லை என தேசிய மக்கள் சக்தி அறிவித்திருந்தது.

ஆகவே அடுத்த மாதம் சீனா செல்லவுள்ள ஜனாதிபதி அங்கு பேசவுள்ள விடயங்களையும் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்றார். (ந-7)

## மாவை.சேனா....

எந்தவொரு மத்தியகுழு உறுப்பினரையும் பொதுச்சபையின் அனுமதியின்றி நீக்க முடியாது என்று அக்கட்சியின் பாராளுமன்றக் குழுக்களின் ஊடகப்பேச்சாளரும், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

ஞானமுத்து சிறிநேசன் எம்.பி மேலும் தெரிவிக்கையில்,

மாவை.சோ.சேனாதிராசா மட்டுமல்ல கட்சியின் எந்தவொரு மத்திய குழு உறுப்பினரையும் பதவி நீக்குவதற்கு பொதுச்சபையின் அனுமதி அவசியமாகும்.


ஆகவே பொதுச்சபையின் அனுமதியின்றி மாவை.சோ.சேனாதிராசாவை கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து நீக்கிவிட முடியாது.


முன்பு கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த கி.துரைரெட்ணசிங்கம் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமையை தன்னிச்சையாக வழங்கினார் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்து அவரை பதவி விலக்க வேண்டும் என்று கட்சியின் மத்தியசெயற்குழுக் கூட்டத்தில் குறிப்பிட்டபோது அவரைப் பதவி நீக்கம் செய்வதாக இருந்தால் கட்சியின் பொதுச்சபையின் அனுமதி தேவையென்றும் அவ்வாறு அனுமதியின்றி பதவி நீக்கினால் நீதிமன்றத்தினை நாட வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

ஆகவே, துரைரெட்ணசிங்கம் விடயத்தின் பொதுச்சபையின் அனுமதி தேவையாக இருக்கின்றபோது மாவை.சோ.சேனாதிராசாவின் விடயத்தில் அவ்விதமான அனுமதி தேவையில்லை என்று கூறுவது எவ்வாறு நியாயமாகும். ஆகவே மாவை.சேனாதிராசாவை பதவி நீக்கம் செய்ய முடியாது. அவர் தலைமைப் பதவியில் நீடிப்பார் என்றார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மோகன் சிங்கின் மறைவிற்கு ஜனாதிபதி அநுர இரங்கல்





(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது எக்ஸ் கணக்கில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அந்த இரங்கல் செய்தியில் ஜனாதிபதி, நான் எனது சார்பிலும், இலங்கை மக்கள் சார்பிலும் இந்தியக் குடியரசுக்கும், கலாநிதி. மன்மோகன் சிங்கின் குடும்பத்தாருக்கும், உலகெங்கிலும் அவர் மீதான பற்றை வெளிப்படுத்தும் எண்ணற்றவர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்கிறேன்.


தொலைநோக்குக் கொண்ட தலைவரான கலாநிதி மன்மோகன் சிங்கின் வழிகாட்டல் இந்தியாவிற்குள் மாத்திரம் மட்டுப்படவில்லை.

2004 முதல் 2014 வரை இந்தியாவின் பிரதமராக அவர் செயற்படுத்திய கல்வி உரிமைச் சட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய கிராமிய வேலைவாய்ப்பு செயற்திட்டம் போன்ற மாற்றத்துக்கான திட்டங்கள் என்பன சமத்துவம், தலையீடு தொடர்பிலான அவரது உறுதியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன.

சர்வதேச ஒத்துழைப்புக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய கலாநிதி மன்மோகன் சிங், நீண்டகால கூட்டுறவு கூட்டணிகளை ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் பிரிக்ஸ் போன்ற அமைப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்.

இந்தியா, அமெரிக்க அணுசக்தி போன்ற ஒப்பந்தங்கள் மூலம் அவரது சிறந்த இராஜதந்திரம் தெரிகிறது. அவரது தன்னடக்கம், அறிவாற்றல் மற்றும் அரச சேவைக்கான அர்ப்பணிப்பு ஆகியன நிச்சயமாக எதிர்கால சந்ததியினருக்கு ஒரு நிலையான முன்மாதிரியாகவும் ஊக்குவிப்பாகவும் அமையும். அவரது ஆத்மா சாந்தி அடையட்டும் என்று பதிவிட்டுள்ளார். (நி-8)

# அநுராதபுரத்தில் விபத்து இருவர் காயம்



(அநுராதபுரம்)

அநுராதபுரம், ஹபரணை, ஹிரிவட்டுன்ன பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சாரதியின் வேகக்கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வான் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தின் போது, காரில் பயணித்த இருவர் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக ஹபரணை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-8)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.
**கணபதிப்பிள்ளை துரைரத்தினம்**
மலர்வு:- 07.02.1939 உதிர்வு:- 21.12.2022
திதி:- அபரபக்க திரயோதசி

அமரர்.
**துரைரத்தினம் பாக்கியம்**
மலர்வு:- 19.02.1945 உதிர்வு:- 24.01.2023
திதி:- பூர்வபக்க திருதியை

(28.12.2024)

"தாயிற் சிறந்த கோயிலும் இல்லை
தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை"

அன்பால் இணைந்து ஒன்றாய் இருந்து
அகிலம் தன்னில் நிறைவாய் வாழ்ந்த - எம்
அப்பா சென்ற ஒருமாத நிறைவில்
அம்மாவையும் அழைத்துக் கொண்ட இறைவா!
தங்களின் அடியில் சரண் புகுந்த
தந்தையும் தாயும் நலமே இருக்க
தம்தாழ் பணிந்தே போற்று கின்றோம்
தந்தருள வேண்டும் அவருக்கு சாந்தியை.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

(சி-676)

என்றும் தங்களின் ஆசியைவேண்டி நிற்கும்
**பிள்ளைகள்.**


# இராசிபலன்

28.12.2024
மார்கழி 13, சனிக்கிழமை
திரயோதசி பின்னிரவு 3.49 மணிவரை
அனுசம் முன்னிரவு 10.45 மணிவரை

சுபநேரம் 3.28-4.58 மணிவரை
இராகுகாலம் 9.28-10.58 மணிவரை
கெர்ப்போட்டம் ஆரம்பம்
சனிப்பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்
ரேவதி, அச்சுவினி

**வளவன்**

**மேஷம்** — மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கடகம்** — உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், மற்றவர்களின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்** — பொது வாழ்வில் புகழ் கூடும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** — வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**ரிஷபம்** — உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** — வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், இல்லம் தேடிய இனிய செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** — உறவினர் பகை அகலும், முன்னேற்றம் கூடும் நாள், சிந்தனை மிகுதியான நாள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**கும்பம்** — வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள்.

**மிதுனம்** — கனவுப் பலிதமுண்டு, அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கடன் பிரச்சினை குறையும் வாய்ப்புண்டு, உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி** — நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள் செயற்பாடுகளில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** — கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், உடல் நலனில் கவனம் தேவை, இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.

**மீனம்** — திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ரோக பயமுண்டு.

**உலகில் விலை கொடுக்காமல் கிடைக்கும் ஒரே சரக்கு அறிவுரை தான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த ஒரு தொகை மணல் மீட்பு




(கண்டாவளை) கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீவில் பகுதியில் சட்டத்திற்கு முரணான வகையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த ஒரு தொகை மணல் கிளிநொச்சி மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நீவில் கிராமத்தில் சட்ட விரோதமாக அகழ்ந்தெடுக்கப்பட்ட மணல் களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்தத் தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் குறித்த இடத்திற்கு சென்று களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மணலை மீட்டுள்ளதுடன் இது தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளனர். (6-8-315)

# வீதியில் உள்ள குழிகளால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

## சீர்செய்யுமாறு கோரிக்கை



(யாழ்ப்பாணம்) ஏ-9 வீதியில் எழுதுமட்டுவாளுக்கும் முகமாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் பாரிய குழிகள் காணப்படுவதால் அவ் வீதியூடாக பயணிக்கும் பொதுமக்கள், வாகன சாரதிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

அதேவேளை குறித்த வீதியால் அதிகளவு வாகனங்கள் பயணித்து வரும் நிலையில் அவ்வீதியில் உள்ள குழிகளினால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

எனவே, இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து செயற்பட்டு குறித்த பாரிய பள்ளங்களை நிரவி சீர் செய்ய வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8)

# யாழ்.பல்கலையில் மார்கழி இசைவிழா 2 ஆம் நாள் அரங்க நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்) யாழ்.இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடம் மற்றும் யாழ்.வணிகர் கழகம் இணைந்து நடத்தும் மார்கழி இசை விழா 2024-2 ஆம் நாள் அரங்க நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

பி.ப 5 மணிக்கு மங்கல விளக்கேற்றல், திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன் நெறியாள்கையில் இந்தியன் கோர்னர், இசைப்பிரிவு மாணவர்கள் நிகழ்த்தும் தமிழ்த் தாய் வாழ்த்தும் யாழ்.வணிகர் கழகம் தலைவர் இ.ஜெயசேகரனின் திருநிறை வழங்கலும் இடம் பெறும்.

இதனைத் தொடர்ந்து பி.ப 5.30-இரவு 9.30 மணிவரை யாழ்.மண்ணின் புகழ்பூத்த இளம் தவில் நாதஸ்வர வித்துவான்களின் இசைச்சங்கமும் திருமதி கவிதா வாமதேவனின் "விரலிசை கானங்கள்", சிவஸ்ரீ விஸ்வ பிரசன்ன குருக்கள் வழங்கும் "தெய்வீக இசையரங்கு" கே.பிகுமரனின் "நாத சங்கமம்" மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நடனத்துறை மாணவர்கள் வழங்கும் நாட்டிய நாடகம் "கடல் கோள் கடந்த தமிழர்" போன்ற அரங்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.(6-8)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்) யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து கால்நடை வளர்ப்பாளர்கள், விவசாய உற்பத்தியாளர்கள், சுய தொழில் உற்பத்தியாளர்கள் ஆகியோருடனான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் சந்தை செல்வா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (6-8-30-33)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்) நவாலி அட்டகிரி சிவன் தேவஸ்தானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் திருவாசக முற்றோதல் நிகழ்வு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது என ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. கா.துரைச்சாமிக்குருக்கள் அறிவித்துள்ளார். (6-8)

# நியமனம் வழங்கக்கோரி அமைச்சர், ஆளுநருக்கு கடிதம்

(சாவகச்சேரி) வடக்கு மாகாணத்தில் உள்ள அரச திணைக்களங்களில் pl-1, pl-11 மற்றும் pl-111 சேவைகளில் உள்ள கீழ் உழைப்புப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவேண்டும் என வடக்கு ஆளுநர் வேதநாயகன் மற்றும் கடற்றொழில் அமைச்சர் சந்திர சேகர் ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வட மாகாண கீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்கம் அமைச்சர் மற்றும் ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ள கோரிக்கைக் கடிதத்தில் வடமாகாண கீழ் உழைப்பு பட்டதாரிகளாகிய நாம் கடந்த 2021 ஆம் ஆண்டு தொடக்கம் எமது பட்டதாரி நியமனம் தொடர்பாக ஆளுநர் மற்றும் தொடர்புடைய அமைச்சுக்களிடம் எழுத்து மூலமாகவும் நேரடியாகவும் கோரிக்கை விடுத்து வருகிறோம்.

அது தொடர்பாக பல பதில் கடிதங்கள் எம்மை திருப்திப் படுத்த அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் ஆக்கபூர்வமான எந்தவொரு நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படாமை எம்மை மனவேதனைக்கு உள்ளாக்கின்றது.

இதேபோன்றதொரு நிலைமை கடந்த 1995-2005 காலப்பகுதியில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அரச திணைக்களங்களில் காணப்பட்ட pl வகுதிக்குள் உள்ளடங்கும் கீழ்உழைப்பு பட்டதாரிகளுக்கு ஏற்பட்டது.

பின்னர் அவர்கள் தொடர்ச்சியாக முன்வைத்த கோரிக்கையின் பயனாக அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு 2006 ஆம் ஆண்டு பட்டதாரி நியமனம் மேற்கொள்ளப்பட்டது.

அதனை அடிப்படையாகக் கொண்டு தற்போது வடக்கு மாகாணத்தில் உள்ள அரச திணைக்களத்தில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கீழ் உழைப்பு பட்டதாரிகளாக கடமையாற்றும் பட்டதாரிகளுக்கு பட்டதாரி நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (6-8-30)

# தனியார் பேருந்து நிலைய பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் சந்திரசேகரன்

(யாழ்ப்பாணம்) அதிக செலவில் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் தனியார் பேருந்து நிலையம் அநாதையாக காணப்படுகின்றது என கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று தனியார் போக்குவரத்து துறையினரை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தினர், பல்வேறு பிரச்சினைகளை எமக்கு எடுத்துக் கூறியிருந்தனர்.

அதில் முக்கியமானது யாழ். மத்திய பேருந்து நிலைய போக்குவரத்தாகும். யாழில் மிகவும் அதிக செலவில் ஒரு பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அது இன்றைக்கு ஆளில்லாத அநாதையாக்கப்பட்ட இடமாக உள்ளது. ஆகையால் அதனை மாற்றியமைக்க வேண்டிய தேவை எல்லோருக்கும் உள்ளது.

அந்த தேவையை முதன்மைப்படுத்தியதாகவே யாழ். மாவட்ட தனியார் போக்குவரத்து துறையினரின் கோரிக்கை அமைந்துள்ளது.


அந்தவகையில் எதிர்வரும் காலங்களில் இது குறித்து இங்கிருக்கின்ற பிராந்திய போக்குவரத்து ஆணையாளர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி அவர்கள் ஏன் இவ்வளவு தாமதப்படுத்தினார்கள் என்ற கேள்வி கேட்க வேண்டிய தேவை உள்ளது. ஆளுநருக்கும் இது குறித்து தெரியப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

இந்த பிரச்சினையை கலந்துரையாடல் மூலம் சுமூகமாக தீர்த்துக் கொள்ள வேண்டும் என நாங்கள் நினைக்கின்றோம். அதுவும் சாத்தியமாகாத பட்சத்தில் இது குறித்து நேரடியாக போக்குவரத்து அமைச்சரோடு கலந்துரையாடி இதற்கு நிரந்தரமான தீர்வினை பெற்றுக்கொடுப்போம் என தெரிவித்தார். இதில் அமைச்சர் சந்திரசேகரன், பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய தனியார் போக்குவரத்து சங்க பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர். (6-8)

# மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்) மனவளக்கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக்கலைப் பயிற்சிகள் அறிமுகவுரையுடன் இன்று மாலை 5 மணிககு இல.81 பிறவுண் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மன வளக்கலை பேராசிரியர் கே. [illegible] [illegible] (6-8)



மல்லாகம் தெற்கு ஜே/212 கிராம அலுவலர் பிரிவில் உள்ள பங்களா வீதியில் சிரமதானப் பணி நடவடிக்கையினை மல்லாகம் வீரபத்திர ஆலய தொண்டர் சபையினர், பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் ஊர்மக்கள் இணைந்து அண்மையில் முன்னெடுத்து இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய வேட்புமனுக் கோரல்

## ஆதரித்த மொட்டுக்கட்சி



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான புதிய வேட்புமனுக் கோரும் அரசாங்கத்தின் தீர்மானத்தை மொட்டுக் கட்சி ஆதரித்துள்ளது.

இது தொடர்பில் மொட்டுக் கட்சி எனப்படும் பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

இடைநிறுத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்குப் புதிய வேட்பு மனுக்கள் கோரும் அரசாங்கத்தின் தீர்மானம் வரவேற்கத்தக்கது.

அதனை நாங்கள் ஆதரிக்கின்றோம். எதிர்வரும் எந்தவொரு தேர்தலிலும் மொட்டுக் கட்சி அதன் சொந்த சின்னத்திலேயே போட்டியிடும். எங்களது சின்னத்தை விட்டுக் கொடுக்க நாங்கள் தயாரில்லை.

எங்களுடன் இணையும் ஏனைய கட்சிகளும் மொட்டுக் கட்சியின் சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என்பதே எங்கள் நிபந்தனையாக இருக்கும்.

எதிர்வரும் காலங்களில் கட்சியை மீண்டும் வலுப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உத்தேசித்துள்ளோம் என்றும் நாமல் ராஜபக்ஷ எம்.பி தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (நி-8)

# மதுபோதையில் சாரத்தியம் ரத்தாகும் அனுமதிப் பத்திரம்

(கொழும்பு)

மதுபோதையில் வாகனம் ஓட்டியதற்காக கைது செய்யப்படும் சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரத்தை ஓராண்டுக்கு இடைநிறுத்துமாறு அல்லது சாரதி அனுமதிப் பத்திரத்தை ரத்து செய்யுமாறு நீதிமன்றில் கோருவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருவதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மதுபோதையில் சாரதிகள் அடிக்கடி வாகனங்களை செலுத்துவதை காணக்கூடியதாக உள்ளதாகவும், இது தொடர்பாக அபராதம் அதிகரிக்கப்பட்டால் இந்த நிலைமையை கட்டுப்படுத்த முடியும் என நம்புவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (நி-8)


**லங்கா மஹறால் (PVT) LTD**

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
**077 839 3974**


# ஹெரோயினுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொம்மைவெளி பகுதியில் வைத்து 120 மில்லிகிராம் ஹெரோயினுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞன் யாழ்.பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (6-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கிபா- 18 1/2
உயரம் : 5'4"
தகைமை/தொழில்:Bsc, Assistant Manager.
எதிர்பார்ப்பு : அரச தொழில்.
தொ.இ: B/15036

பிறப்பு: 1995 - இந்து
நட்சத் திரம்: சதயம்
உயரம் : 6'1"
தகைமை/தொழில்: Diploma in Q.S, Management Assistant.
எதிர்பார்ப்பு - அரச/தனியார் உத்தியோகம்.
தொ.இ: B/15037

பிறப்பு:1994 - இந்து
நட்சத்திரம்: அத்தம்
உயரம் : 5'9"
தகைமை/தொழில்: Bsc, Msc (UK), Work Freetime.
எதிர்பார்ப்பு: PR, London.
தொ.இ: B/15038

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு -1996 - இந்து
நட்சத்திரம்: ரேவதி
கிபா- 27
உயரம் : 5'3"
தகைமை/தொழில்: NDT, Techer (Gov.) .
எதிர்பார்ப்பு: அரச தொழில்.
தொ.இ: G/15045

பிறப்பு -1994 - இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கிபா- 13
உயரம் : 5'8"
தகைமை/தொழில் - BA, MA (No Work)
எதிர்பார்ப்பு : அரச உத்தியோகம்.
தொ.இ: G/15047

பிறப்பு - 1998 - இந்து
நட்சத்திரம்: சதயம்
உயரம் : 5'5"
தகைமை/தொழில்: Bsc (Final Year)
எதிர்பார்ப்பு - Engineer, QS, IT.
தொ.இ: G/15050

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## வலிகாமம் தெற்கு பிரதேசசபை- சுன்னாகம்

## ஏலவிற்பனை-திருத்தம்

மேற்படி விடயம் தொடர்பாக 24.12.2024ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனை அறிவித்தலில் எமது சபையின் சுன்னாகம் வாழைக்குலை சந்தையில் குவிக்கப்பட்ட கட்டட **இடிபாடுகள்** என்பது **அகழ்வு செய்யப்பட்ட கண்ட கற்கள்** என திருத்தம் செய்யப்படுகிறது. ஏனைய நிபந்தனைகள் 24.12.2024 பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு எவ்வாறு வலுவில் இருக்கும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**திருமதி சாரதா உருத்திரசம்பவன்**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்.**
**28.12.2024**

(சி-1899)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்

## ஆதனப் பெயர்மாற்றம்

பொக்கன்கலட்டி ஒழுங்கை, இல 12/18, வட்டாரம்- 03

வலிகாமம் மேற்குபிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 03 பொக்கன்கலட்டி ஒழுங்கையிலுள்ள இல: 12/18 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் **அம்பலவாணர் சரவணமுத்து** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **சரவணமுத்து நல்லையா கைம்பெண் கமலலோசனி** ஆகியவர் குறித்த ஆதனம் தனது மாமா மாமியாகிய அம்பலவாணர் சரவணமுத்துவும் பெண் நாகமுத்துவாலும் 1919.09.22 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு கதிரித்தம்பி சுப்பிரமணியம் முகதாவில் 6792 ஆம் இலக்கத்தில் எழுதப்பட்ட அறுதி உறுதியின் பிரகாரம் தொல்புரம் இராமலிங்கம் கதிரேசரும் பெண் கதிராசிப்பிள்ளையிடமிருந்து கொள்வனவாக வாங்கப்பட்டதெனவும், அவர்கள் அதனை தமது மகளான மகேஸ்வரிக்கு சீதனமாகக் கொடுத்திருந்தார்கள் எனவும், அவர் மலேசியாவுக்கு குடும்பமாக வசிக்கச் சென்றபோது தங்களிடம் வாய்ச்சொல் மூலம் நன்கொடை அளித்திருந்தார் எனவும், தான் தனது கணவருடன் அவ்வாதனத்தை ஆட்சி செய்து அவர் காலஞ்செல்ல தனது முழுமையான ஆட்சியில் வந்ததெனவும் , குறித்த ஆதனத்தில் 45 வருடங்களுக்கு மேற்பட்ட பிரசித்தமான ஆட்சியில் இருந்து வருவாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 8029/11.06.2006 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

**நல்லையா தேவரமணன்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11021/ 04.01.2010 ம் இலக்க உறுதியால் குறித்த **சரவணமுத்து நல்லையா கைம்பெண் கமலலோசனி** ஆகிய வரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **நல்லையா தேவரமணன்** ஆகியவர் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **நல்லையா தேவரமணன்** ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனத்தின் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்குபிரதேசசபை.**

(2846)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதம்

## மன்மோகன் சிங் உடலுக்கு இந்திய பிரதமர் மோடி அஞ்சலி



(டில்லி)

மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உடலுக்கு இந்திய பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

முன்னாள் பிரதமரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான மன்மோகன் சிங்கிற்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர் டில்லி எய்ம்ஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு அவர் உயிரிழந்தார்.

இதையடுத்து, மன்மோகன் சிங்கின் உடல் டில்லியில் உள்ள அவரது வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அவரது உடல் முழு அரசு மரியாதையுடன் நாளை தகனம் செய்யப்படவுள்ளது.

இந்நிலையில் டில்லியில் உள்ள வீட்டில் வைக்கப்பட்டுள்ள மறைந்த முன்னாள் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கின் உடலுக்கு தலைவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். அதன்படி பிரதமர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி உட்பட பலரும் மன்மோகன் சிங்கின் உடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தலைவர்கள் அஞ்சலி செலுத்திய பின் மன் மோகன் சிங்கின் உடல் இன்று பொது மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட உள்ளது. (நி-8)



# ரஷ்யாவால் சுட்டு

# அஜர்பைஜா

## ❖ சர்வதேச ஊடகங்கள்

## ❖ மறுப்பு தெரிவித்த ரஷ்

(மொஸ்கோ)

**கஜகஸ்தானில் நடந்த பயங்கர விமான விபத் அஜர்பைஜானின் முதற்கட்ட விசாரணையில் குறித்த விம வான் பாதுகாப்பு அமைப்புகளால் சுட்டு வீ கண்டறியப்பட்டதாக பல சர்வதேச ஊடகங்கள் செய்தி வெ**

அஜர்பைஜான் ஏர் லைன்ஸின் J2-8243 விமானம், கடந்த புதன் கிழமை தெற்கு ரஷ்யாவில் உள்ள செச்சினியா பிராந்தியத்தின் தலைநகரான க்ரோஸ்னிக்கு செல்லும் போது கஜகஸ்தானின் அக்டாவ் நகருக்கு அருகில் விபத்துக்குள்ளானது.

இதில் பயணித்த 38 பேர் உயிரிழந்தனர் மற்றும் 29 பேர் காயமடைந்தனர்.

இந்த பேரழிவு குறித்த தனது ஆய்வின் கண்டுபிடிப்புகளை அஜர்பைஜான் இன்னும் பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

எனினும் விசாரணையை நன்கு அறிந்த ஆதாரங்களை மேற்கோள்ளிட்டு ரஷ்ய விமான எதிர்ப்பு ஏவுகணைகள் தான் விபத்துக்கு காரணம் என்று அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் நேற்று முன்தினம் வியாழனன்று தெரிவித்துள்



ளன.

விமானம் ரஷ்ய நகரான

க் ம

# ஏமன் விமான நிலையம் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்

## உயிர் தப்பிய உலக சுகாதார ஸ்தாபன தலைவர்

(சனா)

ஏமன் தலைநகர் சனாவை இலக்குவைத்து இஸ்ரேல் வான்தாக்குதல்களை மேற்கொண்டவேளை உலக சுகாதார ஸ்தாபனத்தின் டெட்ரோஸ் அடானம் கெப்ரயோசெஸ் சனாவின் சர்வதேச விமான நிலையத்திலிருந்தார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாங்கள் விமானத்தில் ஏறவிருந்தவேளை தாக்குதல் இடம்பெற்றது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஏமனின் ஹௌத்தி கிளர்ச்சியாளர்களால் பிடிக்கப்பட்டுள்ள ஐ.நாவின் பணியாளர்களின் விடுதலை குறித்த பேச்சுவார்த்தைகளிற்காகவும் ஏமனின் சுகாதார மனிதாபிமான நிலையையும் ஆராய்வதற்காக நான் அந்த நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் வான்தாக்குதல் காரணமாக விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டுக் கோபுரமும் பயணிகள் புறப்படும் பகுதியும் விமான



ஓடுபாதையும் சேதமடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஓடுபாதையிலிருந்து சில மீற்றர் தொலைவிலிருந்தோம் என அவர் தெரிவித்துள்ளார்.

விமானநிலைய ஓடுபாதை திருத்தப்பட்ட பின்னரே நாங்கள் ஏமனிலிருந்து புறப்பட முடியும் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-8)

# நோர்வேயில் பஸ்

## மூவர் பலி-பலர்



(பேர்லின்)

மோசமான வானிலை காரணமாக வடக்கு நோர்வேயில் நேற்று முன்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்டு வீழ்த்தப்பட்ட
# ன் விமானம்

## ள் தகவல்
## ஷ்யா

### பத்து தொடர்பான விமானம் ரஷ்யாவின் வீழ்த்தப்பட்டமை தி வெளியிட்டுள்ளன.



க்ரோஸ்னியை அணுகும் போது மின்னணு போர்முறை அமைப்

புகளால் விமானத்தின் தகவல் தொடர்புகள் முடங்கிய பின்னர், ரஷ்ய ஏவுகணையால் விமானம் தாக்கப்பட்டதாக ஒரு ஆதாரத்தை மேற்கோள்ளிட்டு சர்வதே ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் விமானம் மீதான தாக்குதல் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டதாக ரொய்ட்டர்ஸ் தெரிவிக்கவில்லை.

அதேநேரம் விமானி கள் அவசரமாக தரையிறங்குமாறு கோரியதையடுத்து, விமானம் ரஷ்யாவில் தரையிறங்க அனுமதிக்கப்படவில்லை என்றும், அதற்கு பதிலாக காஸ்பியன் கடலின் குறுக்கே அக்டாவ் நோக்கி பறக்குமாறும் இயக்கப்பட்டதாக அரசாங்க ஆதாரங்களை யூரோநியூஸ் மேற்கோளிட்டுள்ளது.

இதனிடையே, பறவைகள் கூட்டத்தைத் தாக்கியதால் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது என்று ரஷ்யாவின் விமானப் போக்குவரத்துக் கண்காணிப்பகம் முதலில் கூறியது.

அண்மைய வாரங்களில் உக்ரைனிய ட்ரோன்களால் குறிவைக்கப்பட்ட ரஷ்யாவின் வடக்கு காகசஸின் ஒரு பகுதியின் மீது விமானம் பறந்து கொண்டிருந்தது.

மேலும் ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் செவ்வாய் இரவு மற்றும் புதன்கிழமை காலை பல ட்ரோன்களை சுட்டு வீழ்த்தியதாக அறிவித்தது.

சமூக ஊடகங்களில் தாக்கப்பட்ட விமானத்தின் காட்சிகள் விமானம் தரையில் மோதுவதற்கு முன்பு செங்குத்தாக இறங்குவதைக் காட்டியது மற்றும் விபத்துக்குள்ளாகி தீப்பிடித்தது.

விபத்திற்கான காரணம் தொடர்பான ஊகங்களுக்கு எதிராக ரஷ்யா எச்சரித்துள்ளதுடன், விசாரணையின் முடிவுகளுக்கு முன் இவ்வாறான கருத்துக்கள் மற்றும் குற்றச்சாட்டுகளை வெளியிடுவது தவறானது என்று சுட்டிக்காட்டியது. (நி-8)

# ஸ் விபத்து
# லர் காயம்



நோர் ன்தினம் வியாழன் அன்று பயணிகள் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி ஏரியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் இந்த விபத்தில் நால்வர் பலத்த காயங்களுக்கு உள்ளானதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

50 இற்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ், நார்விக்கிலிருந்து சோல்வேர் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது வடக்கு நோர்வேயின் புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான லோபோடென் தீவுக்கூட்டத்தில் ராஃப்ட்சுண்டெட் அருகே உள்ள ஹாட்சல் என்ற இடத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.


விபத்தில் பலத்த காயமடைந்தவர்கள் ஹெலிகொப்டர் மூலம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ஏனையவர்கள் பாடசாலைகள் உட்பட அருகிலுள்ள தங்குமிடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

விபத்தின் போது பஸ்ஸில் இருந்த பயணிகள் நோர்வே, இந்தியா, சீனா, சிங்கப்பூர், மலேசியா, நெதர்லாந்து, பிரான்ஸ் மற்றும் தெற்கு சூடான் உள்ளிட்ட எட்டு வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்று அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

பஸ்ஸில் சுமார் 20 சீன சுற்றுலாப் பயணிகள் இருந்ததாகவும் அவர்களில் ஐவர் சிறு காயங்களுக்கு உள்ளானதாகவும் நோர்வேயில் உள்ள சீனத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது. (நி-8)

# பாகிஸ்தானில் 60 பொது மக்களுக்கு பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனை



(இஸ்லாமாபத்)

2023 மே மாதம் இராணுவ நிலையங்கள் மீதான தாக்குதல்களில் ஈடுபட்டதற்காக முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியின் ஆதரவாளர்கள் உட்பட மேலும் 60 பொது மக்களுக்கு பாகிஸ்தானின் இராணுவ நீதிமன்றம் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதித்துள்ளது.

வார இறுதியில் அதே நீதிமன்றம் இதே தாக்குதல்களுக்காக 25 பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி உறுப்பினர்களுக்கு இதேபோன்ற சிறைத் தண்டனை விதித்திருந்தது.

புதிதாக தண்டனை விதிக்கப்பட்ட சந்தேக நபர்களில் இம்ரான் கானின் மருமகன் ஹசன் நியாசியும் அடங்குவர்.

இவர் 2023 மே 9 அன்று லாகூரில் உள்ள உயர் இராணுவத் தளபதியின் இல்லத்தைத் தாக்கிய குற்றச்சாட்டுக்காக 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார்.

தண்டனை குறித்து இராணுவத்தின் ஊடகப் பிரிவு நேற்று முன்தினம் வியாழக் கிழமை வெளியிட்ட அறிக்கையில் நீதிமன்றம் அனைத்து ஆதாரங்களையும் மதிப்பாய்வு செய்து குற்றவாளிகளின் சட்டப்பூர்வ தண்டனைகளை உறுதிசெய்து உரிய செயல்முறை மற்றும் சட்ட நடவடிக்கைகளை முடித்த பின்னர் தண்டனைகள் வழங்கப்பட்டது.

பாகிஸ்தானின் அரசியலமைப்பு மற்றும் சட்டத்தால் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளபடி அனைத்து குற்றவாளிகளுக்கும் மேல்முறையீடு செய்ய உரிமை உண்டு என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக 25 பாகிஸ்தானியர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை சர்வதேச அளவில் குறிப்பிடத்தக்க விமர்சனத்தை ஏற்படுத்தியது.

ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராஜ்ஜியம் ஆகிய நாடுகள் அனைத்தும் இராணுவ நீதிமன்றத் தண்டனைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் சுயாதீன ஆய்வு இல்லாதது குறித்து கவலைகளை எழுப்பின, விசாரணைகளின் நியாயத்தை கேள்விக்குள்ளாக்கின.

எனினும் பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சு விமர்சனங்களை நிராகரித்தது, இஸ்லாமாபாத் அதன் சர்வதேச மனித உரிமைகள் கடமைகளை நிறைவேற்றுவதற்கு முழுமையாக அர்ப்பணிப்புடன் இருப்பதாக வலியுறுத்தியது.

2023 மே மாதம் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி ஆதரவாளர்கள் ராவல்பிண்டியில் உள்ள இராணுவத் தலைமையகம் மற்றும் லாகூரில் உள்ள ஒரு மூத்த இராணுவ அதிகாரியின் குடியிருப்பு உட்பட முக்கிய அரசாங்க கட்டடங்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் இராணுவ நிறுவல்களை குறிவைத்து இந்த தளங்களில் பலவற்றை தீக்கிரையாக்கினர்.

இம்ரான் கானும் அவரது கட்சியும் வன்முறையானது பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் ஆதரவாளர்களை ஒடுக்குவதற்கான ஒரு சாக்குபோக்கை உருவாக்க இராணுவத்தால் திட்டமிடப்பட்ட நடவடிக்கை இது என தெரிவித்திருந்தது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மோகன்சிங்கின் உடலுக்கு ரணில் இறுதி அஞ்சலி



(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கின் பூதவுடலுக்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று புதுடில்லியில் இறுதி அஞ்சலி செலுத்தினார்.

இதன்போது, ரணில் விக்கிரமசிங்க மன்மோகன் சிங்கின் மனைவி குர்ஷரன் கவுர் கோஹ்லிக்கு தனது இரங்கலைத் தெரிவித்தார்.

அதேநேரம், இறுதி அஞ்சலிக்காக புதுடில்லியில் உள்ள இந்திய முன்னாள் பிரதமரின் இல்லத்துக்கு வருகை தந்திருந்த இந்திய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை சந்தித்து கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

ரணில் விக்கிரமசிங்க தற்போது இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள நிலையில், அந்த சந்தர்ப்பத்தில் முன்னாள் இந்திய பிரதமருக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.(நி-8)



ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் லைஃப், இன் விற்பனைக் குழுவானது அவர்களின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் துறையில் சிறந்து விளங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்டு, மதிப்புமிக்க SLIM தேசிய விற்பனை விருதுகள் 2024 இல் ஒரு முக்கியமான சாதனையைப் பதிவு செய்தது, திருமதி லக்ஷாந்தி வீரசிங்க (SLIC Life – பத்தரமுல்ல கிளை) Front Liner பிரிவில் முதன்மை விருதினைப் பெற்றுக் கொண்ட அதேவேளை, ஏ.ஜி.ஆர் அமியங்கொட (SLIC Life – Gampaha கிளை) விற்பனை மேற்பார்வையாளர் பிரிவில் முதன்மை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 400 | 500-600 | 400 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 220 | 280 |
| பச்சைமிளகாய் | 1400 | 1300 | 900-1000 | 1200 |
| தக்காளி | 600 | 400 | 400-500 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 120-200 | 200 |
| கோவா | 200 | 350 | 250 | 400 |
| கரட் | 350 | 300 | 250 | 400 |
| பூசணி | 200 | 200 | 200 | 250 |
| புடோல் | 200 | 300 | 200 | 250 |
| வாழைக்காய் | 150 | 100 | 100-130 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 260 | 380 | 200 |
| பாகற்காய் | 1400 | 1100 | 1000 | 1200 |
| வெண்டக்காய் | 200 | 280 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 150 | 200 |
| பயற்றங்காய் | 300 | 450 | 300 | 300 |
| லீக்ஸ் | 350 | 350 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 400 | 350 | 500 |
| கறிமிளகாய் | 800 | 800 | 700-800 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 300 | 420 | 400-500 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | -- | 380 |
| கீரை - 1 பிடி | 160 | 120 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 300 | 400 | 300-500 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 80-150 | 150-200 |
| இராசவள்ளி | -- | 900 | 800 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 850 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 120 | 200 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 90 | 250 |

## இன்று ஒரு தகவல் 291



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# விதியின் பயன்!

நாம் எது நடக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றோமோ அது நடப்பதில்லை. நாம் எது நடக்கக் கூடாது என்று ஆசைப்படுகின்றோமோ அது நடந்துவிடும். இதற்கு எதை காரணம் சொல்வது? அதற்கு சில பேர் விதி என்று காரணம் வைத்திருக்கின்றார்கள். விருப்பத்திற்கு மாறாக நடந்து விட்டால் அதை விதி என்று சொல்லிவிடுவது மிகவும் சுலபம்.

ஒரு சமயத்திலே தேவலோகத்திலே நாராயணனும் லட்சுமிதேவியும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். பூலோகத்திலே நடப்பது எல்லாம் அவர்களுக்கு தெரியும். அந்த சமயத்திலே ஒரு பிச்சைக்காரன் பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான். சாப்பாடு கிடைத்ததும் அதை எடுத்துக் கொண்டு ஒரு தனி இடத்திற்குப் போனான். உட்கார்ந்தான். சாப்பிடுவதற்கு முன்னாலே கடவுளை நினைத்தான். நாராயணா! நாராயணா! என்று நிவேதனம் செய்து விட்டு சாப்பிட ஆரம்பித்தான்.

தேவலோகத்திலிருந்த லட்சுமிதேவி அதைப் பார்த்தவுடனே நாராயணரிடம் சொன்னார். அதோ பார்த்தீர்களா? உங்களுடைய பக்தன். அவன் தினமும் பிச்சை எடுத்து வருகின்ற உணவை முதலிலே உங்களுக்கு அர்ப்பணித்து விட்டுத் தான் சாப்பிடுகின்றான். அப்பேற்பட்ட உங்களுடைய பக்தனை பிச்சை எடுக்க விட்டி ருக்கின்றீர்களே. இது உங்களுக்கே நியாயமா? அவனுக்கு சிறிது செல்வத்தைக் கொடுத்து வசதியாக வாழ வைத்திருக்கக் கூடாதா என்று கேட்டார். நாராயணண் சிரித்தார். அதன்பின் சொன்னார்.

இவன் போன பிறவியிலே செல்வந்தனாகத் தான் இருந்தான். அப்படி இருந்தும் இவன் யாருக்கும் எதுவும் கொடுக்கவில்லை.ஏழைகளுக்கு தான தருமம் எதுவும் செய்யவில்லை. அதனாலே இந்தப் பிறவியிலே கஷ்டத்தை அனுபவிக்கின்றான். அது அவனுடைய விதியின் பயன் என்றார் கடவுள். ஆனால் அதை லட்சுமிதேவி ஏற்றுக்கொள்ளவில்லை. என்ன சொல்கின்றீர்கள்? விதியாவது ஒன்றாவது. நாம் நினைத்தால் முடியாதது என்ற ஒன்று உண்டா? இப்போது நான் அவனுக்கு உதவி செய்யப் போகின்றேன் என்றார். அவனுக்கு சிறிது செல்வம் கொடுத்து அவனை கஷ்டத்திலிருந்து காப்பாற்றப் போகின்றேன் என்றார். சரி செய்துபார் என்றார் அவர். உடனே லட்சுமிதேவி என்ன செய்தார் என்றால் ஒரு பணமுடிப்பை பூலோகத்திலே அந்தப் பிச்சைக்காரன் நடந்து வந்து கொண்டிருந்த வழியிலே போட்டார். வழியிலே இது கிடப்பதைப் பார்த்த அவன் எடுத்துக் கொள்வான் என்பதற்காக.

ஆனால் அந்த நேரம் அந்தப் பிச்சைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? பார்வையில்லாதவர்கள் தெருவிலே எப்படி நடந்து போவார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஒரு ஆசை வந்தது. அதாவது பார்வையில்லாதவர்கள் எப்படி நடந்து போவார்கள் என்று நடந்து பார்த்தான். கண் இரண்டையும் கெட்டியாக மூடிக் கொண்டு தட்டுத் தடுமாறி நடந்து கொண்டிருந்தான். கண் இரண்டையும் மூடிக் கொண்டதால் வழியிலே இருந்த பணமுடிப்பு அவன் கண்ணிலே படவில்லை. அதைத் தாண்டிப் போய்விட்டான். அதன்பின் கண்ணைத் திறந்தான். ஆகா! கண் தெரியாதது போல் நடந்து விட்டோமே என்ற சந்தோஷத்துடன் போய் விட்டான். பின்னாலே ஒருவன் சாவகாசமாக வந்து கொண்டிருந்தான். அவன் கண்ணிலே பட்டது அந்த பணமுடிப்பு. எடுத்துக் கொண்டு சந்தோஷமாக நடக்க ஆரம்பித்தான் அவன். தேவலோகத்திலிருந்து நாராயணனும் லட்சுமிதேவியும் இதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பார்த்தாயா என்ன நடந்தது என்று. அந்த பக்தனைப் பணக்காரனாக மாற்ற வேண்டும் என்று துடித்தாயே. முடிந்ததா உன்னாலே என்றார். லட்சுமிதேவி அதன்பின் தான் ஒத்துக்கொண்டார். உண்மை தான் பிரபு. விதிப்படி தான் எதுவும் நடக்கும் என்பதை இப்போது நான் ஒத்துக் கொள்கின்றேன் என்றார். இப்போது இந்தக் கதையை அறிவுப்பூர்வமாக கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்.

ஒரு பக்தனை பணக்காரன் ஆக்க வேண்டும் என்று கடவுள் நினைத்தால் கூட அது முடியாது என்கின்ற உண்மை இதற்குள்ளே இருக்கிறது இல்லையா? அப்படி என்றால் அந்த விதி யார் கையிலே இருக்கிறது? மனிதன் கையிலே தான் இருக்கிறது. அவன் நல்ல விதமாக நடந்து கொண்டால் விதியும் அவனுக்கு சாதாகமாக இருக்கும். அப்படி இல்லை என்றால் முழித்துக் கொண்டிருக்க வேண்டிய நேரத்திலே கண் மூடியிருக்கின்ற மாதிரி ஆகிவிடும். இந்தப் பிச்சைக்காரனுக்கு ஆனது மாதிரி.

ஒரு ஜெயிலில் இரண்டு கைதிகள். இரண்டு பேரும் பேசிக் கொண்டிருந்தார்கள். நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய் என்று கேட்டான் ஒருவன். பணம் இல்லை. யாரும் உதவி செய்யவும் இல்லை. திருடினேன். அகப்பட்டேன். அது தான் வந்தேன் என்றான். அது சரி நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய் என்று இவனை அவன் கேட்டான். அதற்கு இவன் சொன்னான். என்னிடம் பணமில்லை ஆனால் ஒரு பெரிய மனிதன் எனக்கு உதவி செய்தார். ஒரு பெட்டி நிறைய பணம் கொடுத்து என்னை வைத்துக் கொள்ளச் சொன்னார். அப்படியிருந்தும் ஏன் இங்கே வந்தாய் என்றான். அது தான் விதி அந்த பெரிய மனிதன் என்னிடம் கொடுத்தது முழுவதும் கள்ள நோட்டாக இருந்து விட்டதே என்ன செய்வது என்றான் இவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி வைத்தியசாலைக்கு விஜயம் செய்த தமிழ் எம்.பிகள்

### தேவைப்பாடுகள் குறித்து ஆராய்வு



(கிளிநொச்சி)

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றதன் பின்னராகவே ஸ்ரீ பவானந்தராஜா மற்றும் ஜெ. றஜீவன் ஆகியோர் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலைக்கு விஜயம் மேற் கொண்டனர்.

இந்த விஜயத்தின் போது கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நெதர்லா ந்து நாட்டின் கொடை மற்றும் மென் கடன் மூலம் ரூபா 5000 மில்லியன் செலவில் நிர்மா ணிக்கப்பட்ட மகளிருக்கான சிறப்பு சிகிச்சை நிலையத் தினைப் பார்வையிட்டு அதனை முழுமையாக இயங் கச்செய்ய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் முக்கியமாக ஆராயப்பட்டது.

அத்துடன் வைத்தியசா லையின் செயற்பாடுகளை மேலும் வினைத்திறனாக்கத் தேவையான வெற்றிடங்களை நிரப்புவது மற்றும் ஆளணி எண்ணிக்கையினை அதிகரிப் பது தொடர்பிலும் கலந்துரை யாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்தியர் வினோதன் மற்றும் கிளிநொச்சி பொது வைத்தியசாலை பணிப்பாளர், பிரதிப்பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டார். (6-8)

# அருகி வரும் இயற்கை உரப் பாவனை

### விவசாய கலந்துரையாடலில் ஆளுநர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**முன்னைய காலங்களில் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது அவை அருகிச் செல்வதாக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் நவீன தொழில்நுட்ப பங்களிப் புடன் விவசாய நடவடிக்கை களை மேம்படுத்தல் தொடர் பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் தலைமை யில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை (26.12. 2024) இடம்பெற்றது. இதன் போதே இவ்வாறு தெரிவித் தார்.

விவசாயிகளின் பொருட் களின் உற்பத்தித் தரத்தை மேம்படுத்துவதுடன் அவர் களுக்கான சந்தை வாய்ப்பை தொடர்ச்சியாகப் பெற்றுக் கொடுப் பதன் ஊடாக பெருமளவான விவசாயிகளை ஊக்கப்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் என ஆளு நர் தெரிவித்தார்.

விவசாயம் தொழில்முறை சார்ந்ததாக மாற்றப்பட வேண் டும் என்பதுடன் நவீன தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என ஆரம்ப உரை யில் குறிப்பிட்ட மாவட்டச் செய லர் சு.முரளிதரன், விவசாயி கள் நெல்லுடன் பணப் பயிர் களையும் செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.

நீர் முகாமைத்துவத்துக் கான நியதிச் சட்டங்கள் - கட்ட மைப்புக்கள் இல்லை என்ற குற்றச்சாட்டு விவசாய அமைப் புக்களால் முன்வைக்கப்பட்ட துடன், இதன் காரணமாக எதிர்கொள்ளும் பிரச்சினை களையும் ஆளுநருக்கு தெரி யப்படுத்தினர்.

விவாசாயத்துறை மேம்பாடு மற்றும் நவீனமயப்படுத்த லுக்குத் தேவையான நட வடிக்கைகள் எடுக்கப்படும் என வும் எதிர்கொள்ளும் பிரச் சினைகள் தொடர்பில் தீர்ப்ப தற்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார். (6-8)

## பண்டிகை காலத்தை முன்னிட்டு வியாபார நிலையங்களில் பரிசோதனை

(கிளிநொச்சி)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணி மனைக்குட்பட்ட வியாபார நிலையங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டது.

பூநகரி,ஜெயபுரம்,முழங்கா வில் பொதுசுகாதார பரிசோதகர் பிரிவுகளில் இச்சோதனை நட வடிக்கைகள் பொது சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையில் பிரிவு பொது சுகாதார பரி சோதகர்களால் குழுவாக இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் 43 உணவு கையாளும் நிலையங்களில் மேற்கொண்ட பண்டி கைக் கால பரிசோத னைகளில் எட்டு உணவுகையாளும் நிலையங்களில் 125 உணவுச்சட்ட மீறல்களுக்குட்பட்ட உணவுப் பொருட் கள் கைப்பற்றப்பட்டு உரிமையாளர்க ளின் சம்மதத்துடன் அழிக்கப்பட்டன.



இதில் காலாவதியான பொருட்களை விற்பனைக்காக வைத்திருந்தமை, பிழையான சுட்டுத்துண்டிடல், சுகாதார சீர் கேடு மற்றும் சுகாதாரமற்ற உணவுகையாளுகைக்கு எதிராக கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டன.

இதில் ஒரு உணவுகையா ளும் நிலையம் நீதிமன்ற கட்ட ளைக்கமைய சீல் வைக்கப் பட்டதோடு ஏனைய உணவு கையாளும் நிலைய குற்றங் களுக்காக 35 ஆயிரம் ரூபாய் தண்டப் பணம் மன்றினால் விதிக்கப்பட்டது. (6-8)

## வவுனியாவில் 1387 ஏக்கர் நெற் காணிகளுக்கு இழப்பீடு

### வழங்கத் தீர்மானம்

(குருமன்காடு)

வவுனியாவில் அண்மை யில் ஏற்பட்ட மழை வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதற்கான நட வடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

அந்தவகையில் கமநல அபிவிருத்தி நிலையங்களின் கீழ் செய்கை பண்ணப்பட்ட 3529.25 ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக விவ சாயிகளால் தெரிவிக்கப்பட்டி ருந்தது.

இந்நிலையில் அழிவடை ந்த நெற்காணிகள் தொடர்பாக கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள காப்புறுதிச் சபையின் உத்தியோகத்தர்களால் மதிப் பீடு செய்யும் பணிகள் அண் மைய நாட்களாக முன்னெடுக் கப்பட்டு வந்தது.

மதிப்பீட்டின் அடிப்படை யில் 1387.5 ஏக்கர் நெற்காணி களுக்கு இழப்பீடு வழங் குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது.

ஒவ்வொரு ஏக்கருக்கும் தலா 14,400 ரூபாய் வீதம் இழப்பீடு வழங்கப்படவுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.(6-8-250)




உ
கணபதி துணை

## எனது 34 ஆண்டுகள் ஆன்மீக போராட்டப்பாதையிலே...

### நன்றி கூறுகின்றோம்

சங்கே முழங்கு... வலம்புரி நாதமே! வெள்ளிவிழா கண்ட உனக்கு வலம்புரி நாயகன் ஈசுரவிநாயகரின் தொண்டன் அடியேன் வாழ்த்தும் நல் வாழ்த்துக்கள்.

உன் பிறப்பின் வரலாற்றை அறிந் தேன். நீ பட்ட கஸ்ரங்களையும் அறி வேன். சிறுவயதில் கஸ்ரப்பட்டவர்கள் தான் பின்பு பெரிய அறிஞர்கள், ஞானி கள், மேதாவிகள், ஆன்மீகத்தை தொட் டவர் எவரும் தோற்றதாகச் சரித்திரம் இல்லை. நீயும் அதுபோல் சங்கு சக்கரம் வைத்திருக்கின்றாய். அதனால் உனக்கு தோல்வி கிடையாது.

ஈசுரவிநாயகரின் தெய்வீகத்தை எங்கும் பறை சாற்றினாய் அதன் பலா பலன் விநாயகரின் 21 நாள் கதைப் படிப்பிலே உனது வெள்ளிவிழா கொண் டாட்டம்.

இவ் விழா உனக்கு வெள்ளி விழா அல்ல வெற்றி விழா ஆகும்.

இது உனது எழுச்சியின் ஆரம்பம். இனிமேல் தான் உனது பேரெழுச்சி.

சிறுவர்கள் தொடக்கம் முதியவர் வரை சிரிக்கவும் வைத்தாய், சிந்திக்க வும் வைத்தாய் உன் புகழ் மேன்மேலும் ஓங்கிட பறாளாய் ஈசுர விநாயகரின் கிருபா கடாட்ஷம் உனக்கு உண்டு. உனது குடும்பம் ஆலமரம் போல் விழுது விட்டு உன் சந்ததி வாழையடி வாழை யாக வளர்ந்து ஓங்கிட வாழ்த்து கின்றோம்.

வாழ்க உன் குடும்பம்! வளர்க உன் பணி! ஓங்குக உன் புகழ்!

அடியேனையும் அழைத்து விருது தந்தாய் அதற்கு எனது குடும்பம் சார்பாக வலம்புரிக் குடும்பத்தினருக்கு நன்றி கள் கூறுகின்றோம்.

6 ஆவது விருதாக உனது "பாஞ்ச சன்னியம்" விருது அடியேனுக்குக் கிடைத்திருக்கின்றது.

அத்தனை விருதுகளும் ஈசுர விநா யகர் தந்த பொக்கிஷங்கள் என்பதை இந்த நேரத்திலே கூறி வைக்க விரும்பு கின்றேன்.

**சோழியூரான் பிறைசூடிக்குரு**
**(ஆன்மீகவாதியும் சந்ததிப்பூசகரும் பரம்பரை பரிபாலகரும்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 667





சிறுவனும் அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கட்டிக் கொண்டான். மறுபடியும் அவள் தன்னை விட்டுப் போகாமலிருக்கும் பொருட்டு அவன் அப்படிப் பிடித்துக் கொண்டான் போலும்!

ஆயினும் இந்தக் காட்சி நீடித்திருக்கவில்லை. அவனுடைய பிஞ்சுக்கரங்களை நந்தினி பலவந்தமாக எடுத்துத் தன்னை விடுவித்துக் கொண்டாள். சிறுவனைச் சிம்மாசனத்தில் உட்கார வைத்தாள். மீண்டும் பல்லக்கின் அருகில் சென்றாள். அதனுள்ளிருந்து நாம் முன் பார்த்திருக்கும் வாளை எடுத்துக் கொண்டாள். பல்லக்குத் தூக்கி வந்தவர்களைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்தாள். அவர்கள் பல்லக்கைத் தூக்கிக் கொண்டு சற்றுத் தூரத்தில் போய் மறைவாக உட்கார்ந்து கொண்டார்கள்.

நந்தினி மீண்டும் சிம்மாசனத்தின் அருகில் வந்தாள். கத்தியை அச்சிம்மாசனத்தின் மீது குறுக்காக வைத்தாள். சிறுவன் அதை அடங்கா ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டே, "நான் இதைக் கையில் எடுக்கலாமா?" என்று கேட்டான்.

"சற்றுப் பொறு, என் கண்மணி!" என்றாள் நந்தினி. பிறகு, ரவிதாஸன் முதலியவர்களையும் வரிசைக் கிரமமாக உற்றுப் பார்த்தாள். "சபதம் எடுத்துக் கொண்டவர்களைத் தவிர இங்கு வேறு யாரும் இல்லையே?" என்று கேட்டாள். "இல்லை, தேவி!" என்றான் சோமன் சாம்பவன்.

ரவிதாஸனைப் பார்த்து நந்தினி "சேனாதிபதி!" என்று ஆரம்பித்தாள். ரவிதாஸன் சிரித்தான்.

"இன்றைக்கு உமக்குச் சிரிப்பாயிருக்கிறது. அடுத்தமாதம் இந்த நாளில் எப்படியிருக்குமோ, யார் கண்டது!"

"தேவி! அந்த நல்ல நாள் எப்போது வரப்போகிறது என்று எத்தனையோ காலமாக நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம்."

"ஐயா! நாமோ ஒரு சிலர். நம் சக்கரவர்த்தி சின்னஞ் சிறு குழந்தை. சோழ இராஜ்யம் மகத்தானது, சோழர்களின் சேனாபலம் அளவற்றது. நாம் அவசரப் பட்டிருந்தோமானால் அடியோடு காரியம் கெட்டுப் போயிருக்கும். பொறுமையாக இருந்ததினால் இப்போது காரிய சித்தி அடையும் வேளை நெருங்கியிருக்கிறது. ரவிதாஸரே! நீர் ஏதாவது சொல்ல வேண்டியிருக்கிறதா? இங்குள்ள வேறு யாரேனும் ஏதாவது சொல்ல வேண்டியிருக்கிறதா!"

ரவிதாஸன் அங்கே இருந்தவர்களின் முகங்களை வரிசையாகப் பார்த்துக் கொண்டு வந்தான். அனைவரும் மௌன விரதம் கொண்டவர்களாய்க் காணப்பட்டார்கள்.

"தேவி! நாங்கள் சொல்ல வேண்டியது எதுவும் இல்லை. தாங்கள்தான் சொல்ல வேண்டும். சபதம் நிறைவேறும் வேளை நெருங்கி விட்டது என்றீர்கள். எங்கே, எப்படி, யார் மூலமாக நிறைவேறப் போகிறது என்று சொல்லி அருள வேண்டும்" என்றான்.

"ஆகட்டும் அதைச் சொல்வதற்காகவே இங்கு வந்தேன். அதற்காகவே உங்கள் எல்லாரையும் இங்கே தவறாமல் வரச் சொன்னேன். நம்முடைய சக்கரவர்த்தியையும் அழைத்து வரச் செய்தேன்" என்றாள் நந்தினி.

சிம்மாசனத்தில் வீற்றிருந்த சிறுவன் உட்பட அனைவரும் நந்தினியின் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். அவள் மேலும் கூறினாள்.

"உங்களில் சிலர் அவசரப்பட்டீர்கள். நாம் எடுத்துக் கொண்ட சபதத்தை மறந்து விட்டேனோ என்றும் சிலர் சந்தேகப் பட்டீர்கள். அந்தச் சந்தேகம் அடாதது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## இளைஞனும் பெரியவரும்



ஓர் இளைஞன் சாலை வழியாகப் பாடிக் கொண்டே சென்றான். அவன் குரல் இனிமையாக இருந்தது. ஆனால், அவன் பாடிய பாட்டென்னவோ நன்றாயில்லை. அதில் பொருளும் இல்லை, அழகும் இல்லை. வழியில் ஒரு பெரியவர் எதிர்ப்பட்டார்.

"தம்பி, இந்தப் பாட்டெல்லாம் ஏன் பாடுகிறாய்? உன் குரலே நன்றாயிருக்கிறது. இசையை மட்டும் உன் வாய் அசை போட்டாலே அழகாக இருக்கும். இந்தப் பாட்டைப்பாடி ஏன் குரல் அழகையும் பாழ்படுத்திக் கொள்கிறாய்?" என்று கேட்டார் பெரியவர்.

அவன் அவர் அறிவுரையை இலட்சியம் செய்யவில்லை. தன் போக்கில் பாடிக் கொண்டே சென்றான். நேராகச் சூதாடும் இடத்திற்குச் சென்றான். கையில் இருந்த பொருளையெல்லாம் சூதாடித் தோற்றுவிட்டு இளைஞன் திரும்பி வந்தான். திரும்பி வரும்போது அவன் பாடிக் கொண்டு வரவில்லை. வழியில் இருந்த ஒரு மரத்தடியில் களைப்பாற உட்கார்ந்தான்.

அதே மரத்தடியில் அந்தப் பெரியவர் ஒரு புறத்தில் இருந்தார். இளைஞன் கவனிக்கவில்லை. சிறிது நேரத்தில் ஒருவன் வந்தான். அவனும் இளைப்பாறுவதற்காக மரத்தடிக்கு வந்தான். அருகில் வந்து உட்கார்ந்தான். இளைஞனுக்கு அந்த மனிதனைப் பார்க்கவே அருவருப்பாயிருந்தது. அவன் தன் அருகில் வந்து உட்கார்ந்ததும் இளைஞனுக்குக் கோபம் வந்தது.

"உயர்ந்த சாதியான் நான். என்னருகில் நீ எப்படி வந்து உட்காரலாம்?" என்று கேட்டான். இச் சொற்கள் பெரியவர் காதில் விழுந்தன. "உயர்ந்த சாதி என்று சொல்லிக் கொள்ளுவதை விட ஒழுக்கமாய் இருப்பது சிறந்தது" என்று கூறினார்.

இளைஞன் கோபத்தோடு எழுந்து நடந்தான். பெரியவர் பின் தொடர்ந்தார். வழியில் ஒருவன் இளைஞனை மறித்துத் தான் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்டான். "நடுப்பாதையில் நீ எப்படி என்னைக் கடன் கேட்கலாம்" என்று இளைஞன் அவனை அடிக்கக் கையை ஓங்கினான். அவனும் பதிலுக்குக் கையை ஓங்கவே இளைஞன் பயந்து ஓடிவிட் டான்.

"வீண் வீரம் பேசுவதைவிட விடா நோயுடன் இருப்பது நல்லது" என்றார் பெரியவர். அவன் சென்ற வழியே சென்றார்.

இளைஞன் வீடு சென்றான். வாசலில் நின்ற மனைவி தெருவிலேயே அவனோடு சண்டை போட்டாள். இதைக் கண்ட பெரியவர், "பழிக்கஞ்சாத மனைவியுடன் வாழ்வதை விடத் தனியாய் இருப்பது நல்லது" என்று சொல்லி விட்டு வழி நடந்தார்.

கருத்துரை: - பிழையற்ற பாட்டும், ஒழுக்கஞ் சேர்ந்த குடிப்பிறப்பும், அஞ்சாத வீரமும், நெஞ்சில் அன்புடைய மனைவியும் வாழ்விற்கு இன்பமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளில் தேங்கிக் கிடப்பதே முன்னேற்றத் திற்கான முக்கியத் தடையாகும். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குழப்பங்கள் கருக்கட்டும் இடமாக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

நம் மண்ணில் மனதுக்குத் துன்பம் தரக் கூடிய எந்த நிகழ்வுகள் நடந்தாலும் எங்களிடமும் அரகலப் போராட்டம் நடந்திருந்தால் என்று நாம் அடிக்கடி நினைப்பதுண்டு.

அந்தளவுக்கு சிலரின் நடவடிக்கைகளும் செயற்பாடுகளும் மிகமோசமாக அமைந்து விடுகின்றன.

உதாரணத்துக்கு நேற்று முன்தினம் (26) கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் தேவைகள், பிரச்சினைகள் என ஏகப்பட்ட விடயங்கள் பேசப்பட வேண்டிய கூட்டம் அது.

இருந்தும் அந்தக் கூட்டத்தில் திடீரென ஏற்பட்ட வார்த்தைப் பிரயோகங்கள் அதனைத் தொடர்ந்து உருவான வாதப் பிரதி வாதங்கள் கூட்டத்தின் நோக்கத்தைத் திசை திருப்பிவிட்டதெனலாம்.

தவிர, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் குழப்பும் வகையில் மக்கள் பிரதிநிதிகளும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் செயற்படுவார்களாயின், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இலக்கை அடைய முடியாது போகும் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

இதுதவிர, மாவட்டங்கள் தோறும் நடைபெறுகின்ற ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் என்பது மக்கள் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்ற ஒரு கனதியான கூட்டம்.

இதை இன்னொரு வகையில் கூறுவதாயின், பெறுமதியான பலர் கலந்து கொள்கின்ற கூட்டம் எனலாம்.

எனவே ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமானது மிகவும் வினைத்திறனுடன் நடத்தப்படவேண் டும்.

கூட்டத்தில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள்; அந்த மாவட்டத்தின் அபிவிருத்திக்கு - அந்த மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவுவதாக இருப்பதும் அவசியம்.

ஆனால், அவை எதுவும் கருத்தில் கொள்ளப்படாமல், ஒருசிலர் தங்களின் கிரந்தத்தைக் காட்டிவிட, குறித்த மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் கேலிக்குரியதும் நகைப்புக்குரியதுமாக ஆகிவிடுகிறது.

இத்தகைய நிலைமைகள் அதிகாரிகளின் திட்டங்களை - அவர்களின் பிரசன்னங்களை நலினப்படுத்திவிடும்.

இதற்கும் மேலாக, ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை அவதானிக்கின்ற மாணவர்கள் மற்றும் இளைஞர்கள், கூட்டத்தின் பெறுமதியை குறைத்து நினைப்பதுடன் அந்தக் கூட்டத்தையும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களையும் குறைத்து மதிப்பிடுகின்ற மன நிலைக்கும் தள்ளப்படுவர்.

தவிர, கூட்டங்கள் என்றால் இப்படித்தான் என்ற எண்ணப்பாடும் இளம் சமூகத்திடம் உருவாகும்.

ஆக, ஒரு சிலரின் கிரந்தத்தனங்களால் எங்கள் தமிழ் மக்கள் அவலத்துக்கு ஆளாவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

எனவே ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் யார் குழப்பம் விளைவித்தாலும் அவர்களைப் பொலிஸாரின் துணையுடன் வெளியேற்ற வேண்டும்.

இல்லையேல் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்கள் குழப்பங்கள் கருக்கட்டுகின்ற இடம் என்பதாக நிலைமை மாறிவிடும். கவனம்.

# எதிர்க்கட்சிகளை ஒன்று திரட்டி அரசுக்கு எதிராகப் போராடுவோம்

## ஐக்கிய மக்கள் சக்தி காட்டம்

எதிர்க்கட்சிகள் அனைத்தையும் இணைத்து, அரசாங்கத்தின் மக்கள் விரோதச் செயற்பாடுகளுக்கு எதிராகப் போராடுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

முன்னால் கியரைப் போட்டால் அது பின்னால் தான் அரசாங்கத்துக்கு விழுகிறது. சுற்றுநிருபங்களை மாற்றியமைக்கும் நிலைக்கு அரசாங்கத்தின் நிலைமை தள்ளப்பட்டுள்ளது.

1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் உருவான அரசாங்கம் ஜூலை மாதத்தில் கவிழ்க்கப்பட்டது. 2001இல் நாம் அமைத்த அரசாங்கம் 2004இல் வீழ்ந்தது. கோட்டாபய ராஜபக்ஷ மூன்று வருடங்களுக்குள் வீட்டுக்குச் செல்ல நேரிட்டது. எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என கணிக்க முடியாது.

எதிர்க்கட்சிகள் அனைத்தையும் இணைத்து அரசாங்கத்தின் மக்கள் விரோத செயற்பாடுகளுக்கு எதிராக போராடுவோம். எதிர்க்கட்சிகள் அனைத்தும் எம்முடனே இருக்கின்றன என்றார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட பேராசிரியர் சரித்த ஹேரத்த கருத்து வெளியிடுகையில் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை மீறியே செயற்படுகிறது.

கல்வித்துறையை சிக்கலுக்குள்ளாக்கியுள்ளனர். பிரதமர் ஹரிணி அமரசூரிய வெளியிடும் சுற்றுநிருபங்களை மீள திருத்தியமைக்க போலி கல்வி அமைச்சர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதுவொரு அரசியல் 'புட்செலாட்'. எவ்வாறு நாட்டை முகாமைத்துவம் செய்யப் போகின்றனர் என நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்றார். (ந-7)

## வடக்கு மாகாண ஆளுநருடன் ஆசிரியர் சங்கம் சந்திப்பு

வடக்கு மாகாணத்தில் கல்விப்புலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய இடமாற்றங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களை நேற்று வெள்ளிக் கிழமை மாலை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

2017ஆம் ஆண்டு, வடக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களுக்கும் முதல் நியமனம் கிடைத்த ஆசிரியர்கள் யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ள நிலையில் அந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கான விடயம் தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

மேலும் கடந்த காலங்களில் இடம்பெற்ற விசாரணைகளின் முன்னேற்றங்கள் தொடர்பாகவும் அதில் தலையீடுகள் இருக்கின்றன எனவும் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் ஆளுநருக்குச் சுட்டிக்காட்டினர்.

பாடசாலைகளில் பரீட்சைக்கு மாணவர்களிடமிருந்து பணம் அறவிடப்படுவது தொடர்பில் கேள்வி எழுப்பிய ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், வேறு சில மாகாணங்கள் பரீட்சைக்கு நிதி ஒதுக்குகின்றமையை சுட்டிக்காட்டி அந்த நடைமுறையை பின்பற்றுமாறு கோரிக்கை முன்வைத்தனர்.

அதைச் சாதகமாகப் பரிசீலித்து நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயுமாறு கல்வி அமைச்சின் செயலருக்கு ஆளுநர் பணித்தார்.

மேலும், பாடசாலைகள் மற்றும் கல்விப்புலத்திலுள்ள பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆளுநருடன் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துரையாடினர்.

வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கந்தையா பிரட்லி ஜெனட், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ந-7)

## அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு தொடர்ந்தும் நீடிக்கும்

### பிரதி அமைச்சர் ருவன் செனரத்

அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதியமைச்சர் ருவன் செனரத் தெரிவித்துள்ளார்.

தங்காலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரிசிக்கான தட்டுப்பாடு நீங்கவில்லை என்றும், பொருட்களுக்கான விலை குறைவடையவில்லை என்றும் இன்று பலர் [illegible] முன்வைக்கின்றனர்.

அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம்.

இது தொடர்பான தெளிவுகளை நாங்கள் பெற்றுள்ளோம். இதற்கான பொறுப்பைக் கடந்த அரசாங்கமே ஏற்க வேண்டும்.

நாங்கள் ஆட்சியைப் பொறுப்பேற்கும் போது பெரும்பாலான நெல் களஞ்சியசாலைகள் தனியாரிடமே இருந்தன.

இந்தநிலைமையை சீர் செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதியமைச்சர் ருவன் செனரத் மேலும் தெரிவித்துள்ளார். (ந-7)

## பிரான்ஸ் சென்ற விமானத்தில் இலங்கைப் பெண் உயிரிழப்பு

(கட்டார்)

கட்டாரின் தோஹாவில் இருந்து பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் நோக்கிப் பயணித்த விமானத்தில் திடீர் சுகவீனமடைந்த இலங்கையைச் சேர்ந்த பெண் பயணி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கட்டார் ஏயர்வேஸ் விமானத்தில் பயணித்த பெண்ணுக்கு திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டதையடுத்து, ஈராக்கில் உள்ள எர்பில் சர்வதேச விமான நிலையத்தில் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

இதையடுத்து மருத்துவக் குழுக்கள் விமான நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு சிகிச்சை அளிக்க முற்பட்ட போதும் அவர் ஏற்கனவே விமானத்தில் உயிரிழந்துள்ளமை கண்டறியப்பட்டது.

பிரான்ஸில் தங்கியிருந்த 81 வயதுடைய இலங்கைப் பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

எர்பிலில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம் இது தொடர்பாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அவரது மகனுக்குத் அறிவிக்க ஏற்பாடு செய்திருந்தது.


உயிரிழந்தவரின் சடலத்தை பிரான்ஸுக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டத்தரணிக்கு எதிராக சட்ட நடவடிக்கை

# உயர்நீதிமன்றம் வழங்கிய சரித்திர தீர்ப்பு!

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றத்தில்




c) மேற்கூறிய விடயங்களின் காரணமாக நீங்கள் ஒரு விதத்தில் நடந்து கொண்டீர்கள்: இது நியாயமான முறையில் இழிவானதாகவோ அல்லது மரியாதையற்றதாகவோ கருதப்படும். நல்ல பெயர் மற்றும் தேர்ச்சி வாய்ந்த வழக்கறிஞர்களின் மத்தியில் உயர் நீதிமன்றம் சட்ட விதி 60 ஐ விதியின் அதாவது இலங்கை குடியரசு ஜனநாயக சோசலிச அரசியலமைப்பின் 136 ஆவது பிரிவின் கீழ் 1988 படி (வழக்கறிஞர்களுக்கான நடத்தை மற்றும் ஆசாரம் நன்நடத்தைக் கோட்பாடு) சட்டமீறல் என கருதப்படும்.

d) மேற்கூறிய சட்டவிதி மற்றும் வழிகாட்டல் **காரணமாக** நீங்கள் ஒரு விதத்தில் வழக்கறிஞராக இருப்பதற்கு தகுதியற்றவர் என்பதை காட்டியுள்ளீர்கள் அத்துடன் இழிவானதாகவோ அல்லது மரியாதையற்றதாகவோ கருதப்படும். உயர் நீதிமன்றம் சட்ட விதி 61 ஐ விதியின் 1988 படி (வழக்கறிஞர்களுக்கான நடத்தை மற்றும் ஆசாரம் நன்நடத்தைக் கோட்பாடு) சட்டமீறல் செய்துள்ளீர்கள் என கருதப்படும்.

மேலும் இந்த நீதிமன்றம் உங்களுக்கு எதிராக இடைநீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கருதுகிறது அல்லது வழக்குரைஞர் பணியிலிருந்து நீக்கப்பட உயர் நீதிமன்ற சட்டவிதிகள், 1978 (பகுதி VII) இலங்கை குடியரசு ஜனநாயக சோசலிச அரசியலமைப்பின் 136 ஆவது பிரிவின் கீழ் உடன்பட்டிருக்கும் நீதித்துறைச் சட்டம் பிரிவு 42(2)இன் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என கூறப்படுகின்றது.

1978 ஆம் ஆண்டின் சட்டம் எண். 2 இன் நீதித்துறையின் பிரிவு 42(3)இன் அடிப்படையில் இவை உங்களுக்குக் கட்டளையிட உள்ளன. நடைமுறையில் இருந்து உங்களை ஏன் இடைநீக்கம் செய்யக்கூடாது என்பதற்கான காரணத்தைக் காட்ட அல்லது உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞர் பதவியில் இருந்து நீக்கப்பட கூடாது என்பதைக் காட்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு நீதித்துறையின் பிரிவு 42(2) இன் படி வெளிப்படுத்தப்படுகின்றது.

4. விதியை வாசித்து, பிரதிவாதிக்கு விளக்கியபோது, அவர் குற்றமற்றவர் என்று ஒப்புக்கொண்டார் அத்துடன் இந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த நீதிமன்றம் மெய்நிகர் முறைப்பாட்டாளர், வணக்கத்துக்குரிய வெல்லவே ஸ்ரீ சந்தர்னந்த தேரோவிடமிருந்து சாட்சியங்களை கேட்டது மற்றும் முகாமையாளர், சம்பத் வங்கி, கொழும்பு 02 ஆதாரங்களை குருநாகல் மற்றும் மினுவாங்கொடை மாவட்ட நீதிமன்றங்களின் இரண்டு பதிவாளர்கள் சாட்சிக் கூண்டுக்கு அவர்கள் அழைக்கப்படாமலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5.குருநாகல் மற்றும் மினுவாங்கொட நீதிமன்ற மாவட்டங்களின் எல்லைக்குள் அமைந்த இரு கோவில்களின் உடமைகள் தொடர்பாக மெய்நிகர் முறைப்பாட்டாளரான தேரோ, 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சட்டத்தரணியை பிரதிவாதியின் சேவைகளைத் தக்க வைத்துக் கொண்டதாக சமர்ப்பித்தார்.

பிரதிவாதிக்கு திருப்திகரமான சேவையை வழங்கியிராத போதிலும் மொத்தமாக ரூ.4,450,000/- பிரதிவாதிக்கு தொழில்சார் கட்டணமாக, அவர் செலுத்தியிருத்தார். மேலும், பதில் அளித்தவர் ஏமாற்றியதாக கூறப்படுகிறது.

மினுவாங்கொடை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் உண்மையில் செய்யப்படாதபோதிலும் பிரதிவாதியால் மினுவாங்கொடை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாக கூறப்பட்டு மெய்நிகர் புகார்தாரர் ஏமாற்றப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

6.மேற்கூறிய குற்றச்சாட்டுகளை நிரூபித்து, மெய்நிகர் புகார்தாரர் இரண்டு பிரமாணப் பத்திரங்கள் சமர்பித்தார். அத்துடன் பிரமாணத்தின் கீழ் மேலும் சாட்சியமளிக்கப்பட்டது. வணக்கத்துக்குரிய தேரோ ஓர் ஓய்வு பெற்ற அதிபராவார். அத்துடன் ஐந்து கோவில்களின் தலைவரும் அத்துடன் அவை அவரது கட்டுப்பாட்டிலும் உள்ளன. கோவில்களைப் பராமரிப்பதற்கு நியமிக்கப்பட்ட இரண்டு பிக்குகள் மேற்கூறப்பட்ட கோவில்களுள் இரண்டு கோவில்களை தவறான நிர்வாகத்திற்கு- முறையற்ற முறையில் பராமரிப்பதற்காக -முகாமை செய்து கொண்டிருந்தமைக்கு எதிராக வெளியேற்ற சட்ட நடவடிக்கை எடுக்க உதவியை நாடினார். இந்த நோக்கத்திற்காகவே மெய் நிகர் புகார்தாரர் பிரதிவாதியை தக்க வைத்திருந்தார். வணக்கத்துக்குரிய தேரோ சமர்ப்பித்தார். அதாவது பிரதிவாதி ஆரம்பத்தில் ரூ. 1,500,000/- இரண்டு வழக்குகளுக்கும் தொழில் முறை கட்டணமாகவும் மற்றும் அவற்றை வெற்றி பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார்.

7. இது பதிலளிப்பவருடைய முதலாவது மற்றும் மிகத் தெளிவான பிழை என்பதனை குறிக்கிறது. ஒரு சட்ட நிலைமைக்கு உண்மைகள் மற்றும் சாத்தியக்கூறுகள் குறித்து வழக்கறிஞர் ஊகித்து ஆலோசனை வழங்கலாம். அத்துடன் ஒரு வழக்கறிஞர் சாத்திய விளைவுகள் தேடப்படும்போது, ஒரு வழக்கறிஞர் ஊகித்து ஆலோசனை வழங்கலாம். அத்துடன் அங்கே வாக்குறுதியும் இருக்கக்கூடாது என்பது கொடுக்கப்பட்டதாகும். ஒரு வழக்கின் முடிவு என்னவாக இருக்கும் என்பதை எடுத்துக்கொள்ளல், உத்தரவாதமளித்தல் அல்லது உறுதி செய்தல் அல்லது.

வழக்கினுடைய முடிவு என்னவாகும் என அனுமானித்தல் மற்றும் சூனியம் சொல்வது உன்னதமான தொழிலுக்குக் கீழே உள்ளது. பரிசீலனைகள் மற்றும் the like as to what the outcome of a case may be, for puffery and soothsaying is beneath the noble profession.

ஒரு நீதித்துறை முடிவின் சாத்தியமான விளைவுகள் மிகவும் சிக்கலானதாகவும், வித்தியாசமானதாகவும் இருக்கும் என்பதை கவனத்திலெடுக்க வேண்டும். அத்துடன் முழுமையான துல்லியத்துடன் ஒரு வழக்கறிஞர் ஒரு உண்மையான தெளிவுபடுத்துபவரின் நடவடிக்கைகளின் முடிவைக் கணிக்க முடியும்.

ஒரு வழக்கறிஞர் ஒரு வாடிக்கையாளருக்கு உறுதியுடன் விரும்பிய முடிவை உறுதியளிக்கும்போது, இத்தகைய நடத்தை சேவைகளை முறையற்ற முறையில் கோருவதற்குச் சமமானது. முற்றிலும் தவறான செயலைச் செய்யும் ஒரு வழக்கறிஞர் வழக்கறிஞராக இருப்பதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

8. தேரர் மேலும் கூறியது, பிரதிவாதி தான் கோரிய தொழில் முறைக் கட்டணத்தைப் பல தவணைகளில் செலுத்த தொடர்ந்தும் வலியுறுத்தியிருந்தார் எனக் கூறினார். நீதிமன்ற திகதிகள், ஆலோசனைகள் மற்றும் பிரதிவாதி மெய்நிகர் புகார்தாரரைப் பார்வையிட்டபோது தாம் பிரதிவாதியால் பராமரிக்கப்பட்டு வரும் ஒரு சம்பத் வங்கியின் கணக்கில் பல்வேறு கொடுப்பனவுகளுடன் 11 சந்தர்ப்பங்களில், பணத்தை வைப்புச் செய்ததாகவும் கூறினார். பிரதிவாதி மீது தாம் நம்பிக்கை வைத்துள்ளதாக தேரர் விளக்கமளித்துள்ளார். அதனால் அவ்வாறு செலுத்தப்பட்ட தொகைகளுக்கு ஏதேனும் சிட்டைகள் வைத்திருப்பது அவசியம் என தாம் எண்ணவில்லை எனவும் தெரிவித்தார்.

9. மெய்நிகர் புகார்தாரர் வங்கியில் 938,000/= (ரூபா ஒன்பது இலட்சத்து முப்பத்தெட்டாயிரம்), தொகையை வைப்புச் செய்த சிட்டையை சமர்ப்பித்தார். மற்றும் ரூ.50,000/= (ரூபாய் ஐம்பதாயிரம்) வைப்புச் செய்தமைக்கான சிட்டை/ வழங்கப்பட்ட கடிதம் மற்றும் 'P5' என குறிக்கப்பட்ட கையால் எழுதப்பட்ட குறிப்பு-ஆவணம் உட்பட அனைத்து விடயங்களுக்குமான -கணக்குகளுக்குமான சான்றையும் சமர்ப்பித்திருந்தார். மெய்நிகர் புகார்தாரர் இந்த பதிவை ஒரு நாட்குறிப்பில் பதிந்து வைத்திருப்பதாகவும் சமர்பித்தார் அனைத்து பரிவர்த்தனைகள் மற்றும் பிற முக்கிய விடயங்கள் அதாவது தருமங்கள் போன்றவற்றை வைத்திருப்பதாகவும் அதனைச் சமர்ப்பித்திருந்தார்.

10. வங்கி வைப்புத்தொகை உட்பட கூறப்பட்ட பதிவுகளை பரிசீலனை செய்தபின், நீதிமன்றம் இதைக் கவனித்தது அதாவது தவறாகப் பதிவு செய்த ரூ. 80,000 /=, 8,000/=, என திருத்தப்பட வேண்டும். அது மெய்நிகர் புகார்தாரரான தேரோ அவர்களே தனது சாட்சியத்தில் சுட்டிக்காட்டினார். இந்த சிறிய எழுத்து எழுவினை -பிழை தவிர, மற்ற அனைத்து வங்கிப்பதிவு ஆவணங்களும் மெய்நிகர் முறைப்பாட்டு தேரர் வைத்திருக்கும் பதிவுகளை முழுமையாக உறுதிப்படுத்துகிறது.

11.பதிலளிப்பவர் தனது வாக்குமூலத்தில் 4,450,000/= ரூபா தொகையினை தாம் பெறவில்லை என்று உறுதி செய்தார். அவர் ஒப்புக் கொண்டார் சம்பத் வங்கிக் கணக்கில் மொத்தமாக வைப்புச் செய்த ரூ.938,000/= மட்டுமே ஏற்றுக்கொண்டதுடன் மேலும் எதுவும் பெறவில்லை எனவும் கூறினார். இருப்பினும், மெய்நிகர் புகார்தாரரின் ஆதாரத்தில் நான் முன்பு கவனித்துக் கொண்டதுபோல், பணம் செலுத்துவது தொடர்பாக பதிலளிப்பவரால் வழங்கப்பட்ட ரூ.50,000/= தொகைக்கான கடிதம்/ சிட்டை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த ஆவணம் ஆதாரமாக சமர்ப்பிக்கப்பட்டதும், பதிலளித்தவர் ஒரு மதிப்பீட்டுச் சேவைகளைப் பெறுதல் நோக்கத்திற்காக 50,000/= பெற்று கொண்டதாக ஏற்றுக்கொண்டார். கூடுதலாக ரூ.938,000/= முன்பு பெற்றுக் கொண்டதாக ஒப்புக்கொண்டார். இந்த முரண்பாட்டைத் தவிர, அவரது நீதிமன்றத்திற்கு மேலும் தெளிவாகத் தெரிகிறது பதிலளிப்பவர் வாடிக்கையாளருடனான -மெய்நிகர் புகார்தாரர் தனது பரிவர்த்தனைகள் தொடர்பாக எந்தக் கணக்குகளையும் பராமரிக்கவில்லை என

12.செலுத்தப்பட்ட பணம் தொடர்பாக, மெய்நிகர் புகார்தாரர் தெளிவான பதிவுகளை பராமரித்துள்ளார்.

மற்றும் அதை இந்த நீதிமன்றத்தில் சமர்பித்தார், அதேசமயம் பிரதிவாதி இது எதனையும் செய்யத் தவறிவிட்டார். எந்தப் பதிவுகளையும் பராமரிக்கவுமில்லை. வழங்கப்பட்ட அறிவிப்புகளில் உள்ள விடயங்களை மட்டுமே நம்பியிருந்தார். அவரை மெய்நிகர் புகார்தாரர் செய்ததாகக் கூறப்படும் கட்டணங்களின் சில பகுதிகள் வங்கி வைப்புச் சீட்டுகள், பிரதிவாதியால் வழங்கப்பட்ட கடிதம்/ சிட்டை மற்றும் உறுதிமொழி மூலம் அத்தாட்சி உறுதிப்படுத்தப்பட்டது. இந்த சூழலில், மெய்நிகர் புகார்தாரரினால் ஆதாரங்களின் நிலைத்தன்மையாக சமர்ப்பிக்கப்பட்ட சான்று. அத்துடன் பிரதிவாதியால் சமர்பிக்கப்படாத இந்த விடயம் மெய்நிகர் புகார்தாரரின் பதிப்பை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை அத்துடன் பிரதிவாதிக்கு ரூ.4,450,000/= தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளவைக்கின்றது தவிர வேறு வழியில்லை.

13. எங்கள் முன் இருக்கும் குருநாகல் மாவட்ட நீதிமன்ற வழக்கு எண். 8211/L இன் நடவடிக்கைகளில் இருந்து தெரிகிறது. மாவட்ட நீதிபதி 13 மே, 2015 திகதி உறுதியான நடவடிக்கைக்காக போடப்பட்ட மனுவை அவதானித்துள்ளார். அது நிலத்தின் எல்லைகளை அல்லது விரிவினை சரியாக அடையாளம் காணமுடியாதுள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீல நிற...

Congenital Methemoglobinemia என அழைக்கப்படும் நோய்க்கு ஆளாகியுள்ள இந்தச் சிசு விசேட பரிசோதனைக்கும் சிகிச்சைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவின் வைத்திய நிபுணர் ரணவக தெரிவித்துள்ளார்.

நாட்டில் நோயறிதல் வசதிகள் இல்லாததால், குழந்தையின் இரத்தம் ஜேர்மனிக்குப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது குழந்தை அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அதிர்ஷ்டவசமாக, இந்த நோய்க்கான மருந்துப் பொருட்கள் இலங்கையில் கையிருப்பில் இருந்ததால் சிசுவின் உயிரைக் காப்பாற்ற முடிந்ததாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

முழு உடம்பும் நீல நிறமாக மாறுதல், சுவாசிக்கச் சிரமப்படுதல், தசைநார்கள் வளர்ச்சியடையாமை ஆகியன இந்நோய்க்கான அறிகுறிகள் ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோய் பெரும்பாலும் இரத்த உறவுத் திருமணங்களுடன் தொடர்புடையது, ஆனால் இந்த சிசுவின் பெற்றோர்கள் இருவரும் ஒரே இரத்த உறவுகள் அல்ல என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் ரணவக தெரிவித்துள்ளார்.

உலகளவில், இந்த நிலை ஒவ்வொரு ஒரு இலட்சம் குழந்தைகளில் தோராயமாக ஒருவருக்கு ஏற்படும் விகிதத்தைக் கொண்டுள்ளது. இவ்வாறான சிசு ஒன்று இலங்கையில் பிறந்தது இதுவே முதல் தடவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## பேருந்தின்...

வரத்துச் சபைக்குச் சொந்த மான பேருந்து இயக்கச்சிப் பகுதியில் முன் சில்லு அச்சு உடைந்து விபத்துக்குள்ளாகியது.

இதன்போது பேருந்தின் சாரதி பக்கச் சில்லின் அச்சு உடைந்து, சில்லு தீப்பிடித்த நிலையில், அருகில் பயணித்த பட்டா வாகனத்துடன் மோதியதில், பட்டா சாரதி நிலைகுலைந்ததால், பட்டா வாகனமும் விபத்துக்குள்ளாகியது.

பேருந்து சாரதியின் சாமர்த்தியத்தால், பேருந்து குடைசாயாமல் நிறுத்தப்பட்டு சேதங்கள் ஏதும் ஏற்படாமல் தடுக்கப்பட்டது. (ந-7)

## நானே...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளதோடு அந்தக் கூட்டத்தில் தலைமைப் பதவியில் மாவை.சோ. சேனாதிராசா நீடிக்க முடியுமா?, இல்லையா? என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கத்துக்கு மாவை சேனாதிராசா அனுப்பி வைத்துள்ள எழுத்துமூலமான கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சில ஆண்டுகளுக்கு முன்னதாகக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்காகக் கட்சியின் தலைவர் என்ற வகையில் பதில் பொதுச் செயலாளராகச் செயற்படுவதற்கு உங்களை (ப.சத்தியலிங்கம்) நானே முன்மொழிந்திருந்தேன்.

அதற்கு அமைவாகத் தாங்கள் பதில் பொதுச் செயலாளராக எனது அறிவுறுத்தல்களுக்கு அமைவாகச் செயற்பட்டு வருவதோடு தேர்தல் பதிவேடுகளிலும் அவ்வாறே காணப்படுகின்றது.

அத்துடன், கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டம்யாருடைய தலைமையில் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடவில்லை. அதனடிப்படையில் அக்கூட்டம் செல்லுபடியற்றதாகும்.

அதேநேரம், டிசம்பர் 28ஆம் திகதி (இன்று) நடைபெறவிருக்கின்ற மத்திய செயற்குழுக் கூட்டத்துக்கான அறிவிப்பினை விடுவதற்கு முன்னதாக குறித்த கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலை எனக்கு அனுப்பி வைக்குமாறும் எனது அனுமதியின் பின்னரே உறுப்பினர்களுக்கான அறிவிப்பைச் செய்யுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், ஒக்ரோபர் 7ஆம் திகதி என்னால் சிறீதரன் மற்றும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதமானது பதவி விலகும் அறிவிப்பை உள்ளடக்கியது அல்ல. நான் கட்சியின் தலைமைப் பொறுப்பினை சிவஞானம் சிறீதரனை பொறுப்பேற்றுக்கொள்ளுமாறே கேட்டுக்கொண்டிருக்கின்றேன்.

குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு இரண்டு மாதங்களாகின்றபோதும் சிறீதரன் தலைமைப்பதவியை பொறுப்பேற்காமையின் காரணமாக நானே தலைமைப்பதவியில் நீடிக்கின்றேன்.

அவ்வாறான நிலையில் கட்சியின் தலைமைப்பதவி சம்பந்தமாக வாக்கெடுப்பு ஒன்றை முன்னெடுப்பது தேவையற்ற விடயமாகும். தற்போதும் நானே தலைமைப் பதவியில் நீடித்துக் கொண்டிருக்கின்றேன்.

மேலும், கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற முறையற்ற கூட்டத்தில் பங்கேற்றிருந்த நான் உறுப்பினர்களால் வெளியிடப்பட்ட சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் உரிய பதில்களை அளித்துள்ளேன்.

அந்த வகையில், 28ஆம் திகதி நடைபெறவுள்ள மத்திய செயற்குழுக் கூட்டத்தில் வாக்கெடுப்பை நடத்த முடியாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## டிஜிட்...

தாகப் பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் வகையில் ஒரு சிறப்புத் திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) வருடாந்த 1% முதல் 1.5% வரை பணத்தாள்கள் கொடுக்கல் வாங்கல்களுக்காக வீணாக செலவிடப்படுகிறது.

பணத்தைப் பயன்படுத்தி செலுத்தப்படும் கொடுப்பனவுகள் மோசடி மற்றும் ஊழலை அதிகரிப்பதற்கும், பணம் செலுத்தும் செயற்பாட்டின் திறமையின்மைக்கும் வழிவகுக்கிறது.

அதனால் அரச நிறுவனங்கள் அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட உள்ளன. அரச நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளையும் டிஜிட்டல் மயமாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்த மாற்றத்தை எளிதாக்கும் வகையில் 'GovPay' மொபைல் அப்ளிகேஷன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே 16 அரச நிறுவனங்கள் இந்த அப்ளிகேஷனில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

ஏனைய நிறுவனங்கள் ஜனவரி முதல் இணைக்கப்படும். இந்த முன்முயற்சியானது அரச பணம் முழுவதையும் டிஜிட்டல் மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதனால் பொதுச் சேவைகளின் செயற்திறன் மேம்படும்.

டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஊக்குவிப்பது மனித உழைப்பைக் குறைக்கும், முறைகேடுகள் மற்றும் ஊழலை அகற்ற வழிவகுக்கும் என்பதுடன் பொதுமக்களுக்கு வசதியான சேவைகளை வழங்கும்" என்றார். (ந-7)


மஹஜன சம்பத — திகதி 2024.12.27 — சீட்டிழுப்பு இலக்கம் 5698 — E 7 2 3 3 5 2 — அத சம்பத E 3 3 5 2 — சீட்டிழுப்பு இலக்கம் 273 — தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.12.27 — சீட்டிழுப்பு இலக்கம் - 1728 — X 15 19 61 71 X — Double Chance 57769

மெகா பவர் — திகதி 27/12/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 2046 — F 10 02 28 47 80 — 197532

லக்கி 7 VIP — திகதி 2024.12.27 — சீட்டிழுப்பு இலக்கம் 0524 — C 7 5 8 5 4 4 C

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3940 — சீட்டிழுப்பு திகதி 27.12.2024 — H 16 63 69 70 — H 103405

ஹந்தஹன HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.12.27 — சீட்டிழுப்பு இலக்கம் 1007 — கடகம் 13 30 48 53 கடகம் — 121973 — 38

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுப்பர் பல் சம்பத — 27.12.2024 — வெற்றி வாரம் 406 — W 7 3 1 7 3 7 — 15019 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,003,560.80 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2672 — சீட்டிழுப்பு திகதி 2024.12.27 — தினம் வெள்ளிக்கிழமை — 02 22 23 70 N — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.76,339,340.00 — DLB

சனிதா — திகதி 27.12.2024 — வெற்றி வாரம் 4833 — 12 23 31 35 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,804,718.80 — ரூ. 100,000/- 96387 — DLB

சசிரி — வெற்றி வாரம் 0587 — சீட்டிழுப்பு திகதி 27.12.2024 — வெள்ளிக்கிழமை — 01 04 27 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4384 — சீட்டிழுப்பு திகதி 27.12.2024 — தினம் வெள்ளிக்கிழமை — 15 24 28 41 — மிதுனம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,128,670.40 — 118956 — DLB

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — W 28 19 41 46 70 — 1848 — 27.12.2024 வெள்ளிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.559,562,429.00 — DLB

அட கோட்டிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2498 — சீட்டிழுப்பு திகதி 2024.12.27 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,710,025.60 — 02 26 47 56 P — ரூ.100,000/- 359390 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

STUDY IN UK
CANADA / AUSTRALIA / FRANCE / SWITZERLAND



IELTS

கடந்த 14 வருடகாலமாக யாழ் மண்ணில் சிறந்த சேவைகளை வழங்கிவரும் முன்னணி நிறுவனத்தினூடாக உங்கள் உயர்கல்வியினை வெளிநாடு ஒன்றில் தொடர்ந்திட விருப்பமா?

WEC COLLEGE
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
மற்றும் கிளை : சாவகச்சேரி (677)
0779265447/ 0217200989



**Sales Rep தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல ஐஸ்கிறீம் நிலையம் ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள Sales rep தேவை. வயது எல்லை : 25 - 35, சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். இடம் : யாழ்ப்பாணம்.
Stanley Road, Jaffna (2854)
021 221 6660



**TECHNO WORLD**

A/L தொழில்நுட்பப் பிரிவு
செயன்முறை வகுப்புக்கள் மற்றும் பரீட்சைகள்

பொறியியல் தொழில்நுட்பம்
உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்

ஆரம்பம் : 05.01.2025 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி
இடம் : வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம். (C-1901)
077 017 5346


## மாவை...

சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மாவை.சோ.சேனாதிராசா கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து விலகுவதாகக் கட்சியின் பொதுச்செயலாளருக்கு ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி எழுத்து மூலமாக அறிவித்துவிட்டார். அக்காலம் தேர்தலுக்குரியதாக இருந்தமையால் கட்சியால் எவ்விதமான தீர்மானங்களையும் எடுக்க முடியவில்லை.

தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் கட்சியின் பொதுச் செயலாளர் எழுத்துமூலமாக மாவை. சோ.சேனாதிராசாவிடத்தில் அவர் ஏற்கனவே அறிவித்த பதவி விலகல் நிலைப்பாட்டிலா உள்ளார் என்ற கேள்வியை எழுப்பி எழுத்து மூலமாக கடிதமொன்றை அனுப்பியிருந்தார்.

ஆனால் அதற்குரிய பதிலைக் கட்சியின் தலைவர் அனுப்பி வைக்கவில்லை. ஆகவே அவர் கட்சியின் தலைமைப் பதவியில் இருந்து நீங்கும் தீர்மானத்தில் உறுதியாக இருக்கின்றார் என்று தான் கருதும் நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறான நிலையில் கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து நீங்குவதாகத் தானாகவே அவர் அறிவித்த பின்னர் அப்பதவி வெற்றிடமாகிறது. இந்த விடயத்தில் மத்தியசெயற்குழு யாரையும் பதவி நீக்கம் செய்யவில்லை. உறுப்புரிமையை இழக்கவும் செய்யவில்லை. அறிவித்த முடிவொன்றையே அமுலாக்குவதற்கு முனைகின்றது. எனவே இந்த விடயத்தில் பொதுச்சபையின் அனுமதி அவசியமற்றது.

உண்மையில் மத்திய குழுவின் தெளிவான நிலைப்பாட்டிற்காகவே வாக்கெடுப்புக் கூட அவசியமாகின்றது. கட்சியின் தலைமைப்பதவியில் இருந்து நீங்குவதாக அறிவித்து ஒன்றரை மாதம் நிறைவடைந்திருக்கின்றது என்பதும் இங்கே முக்கியமான என எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (ந-7)


**தேவை**

யாழ்ப்பாணத்தில் 2 கோடி ரூபாவுக்கு உட்பட்ட விலையில் வீடு மற்றும் காணி உடனடியாகத் தேவை. (680)
076 050 3863
076 311 9485



**வேலையாட்கள் தேவை**

வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் (Accountant) (ஆண், பெண் இருபாலார் ) தேவை.
இடம் : யாழ்ப்பாணம்
தொ.இல : 077 158 0268
077 839 3974
அத்துடன் கொழும்பில் பணி புரிவதற்கு டிரைவர் (Driver) (ஆண்) மட்டும் தேவை. அத்துடன் கணக்காளர் மற்றும் உதவியாளர் தேவை. (ஆண், பெண் இருபாலாரும்) (679)
தொடர்புகளுக்கு :
077 839 3974


## புலனாய்வுப்...

மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியன தமக்கு நகரப் பகுதியில் காணி ஒதுக்கித் தருமாறு வவுனியாப் பிரதேச செயலகத் திடம் கடந்த காலங்களில் கோரிக்கை விடுத்திருந்தன.

அதற்கமைய குறித்த அமைப்புக்களுக்கு வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள பகுதி மற்றும் திருநாவற்குளம் பாரவூர்தி தரிப்பிடம் ஆகியவற்றைப் பிரித்து வழங்குவது தொடர்பாகக் கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அனுமதி கோரப்பட்டிருந்தது.

எனினும், குறித்த காணி விடயத்தில் தேசியப் புலனாய்வு அலுவலகத்தின் காணிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதாக ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ந-7,250)

## அமைதியை...

நாட்டுவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் ஆயுதம் தரித்த முப்படையினரை பாதுகாப்பில் ஈடுபடுத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

உடன் அமுலாகும் வகையில் இராணுவம், கடற்படை மற்றும் வான் படை ஆகியவற்றின் சிப்பாய்களை பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்துவதற்கான கட்டளை அடங்கிய அதிவிஷேட வர்த்தமானியே வெளியிடப்பட்டள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 ஆவது சரத்திற்கமைய ஜனாதிபதிக்கு உரித்தான அதிகாரத்தின் பிரகாரம் ஆயுதம் தரித்த பாதுகாப்புத் தரப்பினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வர்த்தமானி அறிவித்தலானது மாதாந்தம் புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (ந-7)


**யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அபிவிருத்திச் சங்க விசேட கூட்டம்**

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அபிவிருத்திச் சங்க விசேட கூட்டம் எதிர்வரும் 11.01.2025 (சனிக்கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது. எனவே சகல பெற்றோரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி பி.சுகுமார் (S.L.P.S III)
தலைவர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை (C-1895)



**விவசாயிகளுக்கு**



சீனாவில்(China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 4 ஸ்ரோக் (4 STROKE) பவர் ஸ்பிறேயர் (Power sprayer) 20 லீற்றர். மெல்லிய சத்தத்துடன் நிம்மதியாக வேலை செய்ய, இலங்கையில் முதன் முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.

அத்துடன்



இந்தோனேசியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட விவசாய மருந்து தெளிகருவி (Sprayer) 17 லீற்றர். சில்வர். பிளாஸ்டிக்காலானதும் பற்றறி இணைக்கப்பட்டதும் மற்றும் இணைக்கப்படாததும் விவசாய ஆராய்ச்சி நிலையத்தினால் (FMRC) அங்கீகாரம் அளிக்கப்பட்டதுமான தெளிகருவி இப்பொழுது எம்மிடம் உத்தரவாதத்துடன்.

"நாங்கள் உங்களோடு"
ஆர்க். என். கம்பனி (2862)
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
Hotline : 071 535 7799/ 071 973 9917



**Happy Supermarket - உரும்பிராய்**

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 238/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 160/= | |
| 01 5Kg Prima மா பை | - 920/= | ~~1150~~/= |
| 1Kg சிவப்பு பருப்பு | - 274/= | Max 3Kg |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 400/= | |
| 1Kg பயறு | - 580/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 660/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 770/= | |
| 01 விஜிதா அரிசி 10Kg | - 2720/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 237/= | |
| 1Kg சம்பா(உள்நாடு) | - 240/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல்(உள்நாடு) | - 220/= | Max 2Kg |
| 01 டசின் தீப்பெட்டி | - 160/= | ~~240~~/= |

400g nestomalt ~~780~~/= 725/=



400g Anchor ~~1050~~/= 990/=



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (678)
Happy Supermarket
0777 8080 30



**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் கைதடி மெயின் றோட்டுடன் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 1 ½ , 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப் பாதையுடன், நிலப் பரப்பு, மேட்டு நிலம், நன்னீருற்று
- UDA அனுமதி, பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்,
- தரகர் தேவையில்லை
- பரம்பரை ஆவணம்
- பார்வையிடும் நேரம் : காலை 8.00 முதல் மதியம் 1.00 வரை பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 வரை (2864)

குரு
076 069 1105/ 076 298 1105


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்றெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org